# திருமண வரன் தொடர்பாக

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:.பத்துல் மஸீஹ்
## (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நிகழ்த்திய

# இரு முக்கிய ஜுமுஆ பேருரைகள்

வெளியிடுவோர்
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
காதியான்

فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالنُّوْرِ الَّذِیْۤ اَنْزَلْنَا ؕ
وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِیْرٌ (64:9)

# திருமண வரன் தொடர்பாக

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

**(அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நிகழ்த்திய**

## இரு முக்கிய ஜுமுஆ பேருரைகள்

வெளியிடுவோர்:
நஸாரத் நஷ்ரோ இஷாஅத், காதியான்

Tamil Translation of the Book

**Two Important Sermons Regarding Matrimonial Matters (Rishta Nata)**

by

**HAZRAT MIRZA MASROOR AHMAD (atba)**


| | | |
|---|---|---|
| Translated by | : | Muallim M. Nijamudeen |
| Composed by | : | A. Abdul Nizar |
| Year | : | 2021 |
| Copies | : | 1000 |
| Publisher | : | Nazarat Nashr-o- Isha'at Qadian. |
| Printed at | : | Fazl-e-Umar Printing Press Qadian - 143 516 Gurdaspur, Punjab. |

# முன்னுரை

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 24 டிசம்பர் 2004 மற்றும் 15 ஜனவரி 2010 ஆகிய தேதிகளில் திருமண வரன் தொடர்பாக ஆற்றிய ஜுமுஆ பேருரைகளை, ஜமாஅத் மக்கள் கணிசமான எண்ணிக்கையில் இருக்கும் இடங்களில் பேசப்படும் இந்திய மொழிகளில் வெளியிட வேண்டும் என்ற ஆலோசனை 2019 -ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய மஜ்லிஸே ஷூராவில் முன்வைக்கப்பட்டது.*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து இந்த ஆலோசனைக்கு ஒப்புதல் வழங்கினார்கள்.*

*ஆகவே, ஒப்புதல் அளிக்கப்பட்ட அந்த ஆலோசனைக்கு ஏற்ப, நஸாரத் நஷ்ரோ இஷாஅத் காதியான் அவ்விரு ஜுமுஆ பேருரைகளையும் நூல் வடிவில் வெளியிடுவதற்கான நற்பாக்கியம் பெறுகிறது.*

*இந்த நூலை வடிவமைப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக! மேலும் இந்த நூல் ஜமாஅத் மக்களின் தர்பிய்யத்துக்கு சிறந்த வழிவகையாக அமையட்டுமாக! ஆமீன்.*

***நாஸிர் நஷ்ரோ இஷாஅத் காதியான்***

# விதவைகள் மற்றும் திருமணத்துக்கு தகுதியான ஆண்கள் பெண்கள் ஆகியோருக்குத் திருமணம் செய்து வைப்பது தொடர்பாக திருக்குர்ஆன், ஹதீஸ்கள் மற்றும் ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களைச் சான்றாகக் கொண்டு மிகவும் வலியுறுத்தப்பட்ட முக்கியமான அறிவுரைகள்

[அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ∴பிரான்ஸிலுள்ள மஸ்ஜிது பைத்துஸ் ஸலாம் -ல் 24.12.2004 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை]

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

وَاَنْكِحُوا الْاَيَامٰى مِنْكُمْ وَالصّٰلِحِيْنَ مِنْ عِبَادِكُمْ وَاِمَآئِكُمْ ؕ اِنْ يَّكُوْنُوْا
فُقَرَآءَ يُغْنِهِمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ
(24:33)

தற்காலத்தில் திருமண விவகாரங்களில் அதிகமான பிரச்சனைகள் வருகின்றன. தினமும் கடிதங்களில் அது குறித்து கூறப்படுகிறது. இளம் பெண்களின் சார்பாகவும், பெண்களின் சார்பாகவும் இளம் பெண்களின் வரன் பேசுதல் குறித்த பிரச்சனைகள் வருகின்றன. குறைந்த பொருளாதாரத் தகுதியுள்ளவர்களுக்கு திருமண விவகாரங்களில் பையன்கள் அல்லது பெண்கள் தரப்பில் பிரச்சனைகள் வருகின்றன. விதவைகளை மணம் செய்து வைத்தல் தொடர்பாகவும் பிரச்சனைகள் உள்ளன. அவர்களில் சில விதவைகள் மறுமணம் செய்து வைக்கத்தக்க வயதினராக உள்ளனர். அல்லது தமது பாதுகாப்பிற்காக மறுமணம் செய்து வைக்கப்படுவதை விரும்புகின்றனர். அவர்களின் மண விவகாரத்தில் பிரச்சனைகள் உள்ளன. ஆனால் அந்தப் பெண்கள் சில வேளைகளில்

சமூகத்தின் பார்வைக்கு அஞ்சுகின்றனர். தமக்கு மணம் முடிக்கத் தேவை என்று உணர்ந்தும் மணம் செய்து கொள்வதில்லை.

எவ்வாறிருப்பினும், பல்வேறு படித்தரங்களில் இருப்பவர்களுக்கு பல பிரச்சனைகள் உள்ளன. நமது சில கிழக்கத்திய நாடுகளில் விதவைகள் தொடர்பாகக் கூறுவேன். இவ்விஷயங்கள் மிகவும் தீயவையாகக் கருதப்படுகின்றன. இன்னும் சொல்வதாயின், பெண்கள் விதவைகளாகி விட்டால் மறுமணம் செய்வது பாவம் என்று கருதப்படுகிறது. மேலும், சில அப்பாவிப் பெண்கள் தமது நிலைமைகளின் காரணத்தால் மறுமணம் செய்ய விரும்புகிறார்கள். சிலவேளைகளில் அவர்களுக்கு சம்பந்தமும் கூடி வருகிறது. ஆனால், அவர்களது நெருங்கிய உறவினர்கள், நான் கூறியது போன்று அதனை பெரும் பாவமாகக் கருதுகின்றனர். மேலும், இவ்வாறு பல்வேறு விஷயங்களைக் கூறி அப்பாவிப் பெண்களை எந்த அளவுக்குத் தாழ்த்தி விடுகிறார்கள் எனில், அவர்கள் தம் வாழ்க்கையை வெறுத்து விடுகின்றனர். மேலும், மிகவும் வியப்பிற்குரிய விஷயம் என்னவெனில், இங்கு ஐரோப்பா வந்தும் மற்ற விஷயங்களில் ஒளி பொருந்திய சிந்தனை என்று கூறி நிறைய விவகாரங்களில் அதுவும் இஸ்லாம் அனுமதிக்காத விஷயங்களில் கூட ஈடுபடுபவர்கள், விதவைகளை மணம் செய்து வைக்குமாறு அல்லாஹ்வுடைய கட்டளை விஷயத்தில் தன்மானத்தைக் காட்டுகிறார்கள்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: நான் ஓதிய வசனத்தில் வருகிறது. “உங்களிடம் உள்ள விதவைகளுக்கு திருமணம் செய்து வையுங்கள். மேலும் உங்களிடம் உள்ள அடிமை ஆண்கள், அடிமைப் பெண்களில் நல்ல மக்களை திருமணம்

செய்து வையுங்கள். அவர்கள் ஏழைகள் எனில் அல்லாஹ் தனது அருளால் தன்னிறைவு பெற்றவர்களாக்குவான். மேலும் அல்லாஹ் மிகவும் தாராளமாக வழங்குபவனும் நிரந்தரமான அறிவுள்ளவனும் ஆவான்.''

இதுவே அல்லாஹ்வின் கட்டளையாகும். அதன்படி ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும். அல்லாஹ் தெளிவாக விவரித்துக் கூறுகின்றான். சமூகத்தில் நன்மைகளைப் பரப்ப நினைத்தால் சமூகத்தில் மறுமணத்திற்கு தகுதியான விதவைகளுக்கு மறுமணம் செய்து வைக்க முயற்சி செய்யுங்கள். இன்னும் சொல்வதாயின், அக்காலத்தில் தீமை பரவி விடாமல் இருக்கவும், அடிமையாக இருந்த ஆண்கள் மற்றும் அடிமையாக இருந்த பெண்கள் மத்தியில் நல்லியல்பு கொண்டவர்களை, ஏழைகளாக இருப்போர் அவநம்பிக்கை அடைந்து விடக் கூடாது என்பதற்காகவும் மணம் செய்து வைத்தனர். இதுவே திருமணத்தை ஒழுங்குபடுத்தும் கட்டளையாகும். இக்காலத்தில் அடிமைகள் இல்லை. ஆனால், நிறைய நாடுகளில் ஏழ்மை உள்ளது. ஏழ்மையால் திருமணம் நடப்பதில்லை எனில் ஜமாஅத் அவர்களுக்கு உதவியும் செய்கிறது. எனவே, சிலர் தனிப்பட்ட முறையிலும் உதவி செய்கிறார்கள்; செய்யவும் வேண்டும். இதனைக் கூறுவதால், அவர்களிடம் ஏழ்மை உள்ளது; எனவே, திருமணம் செய்து வைக்காதீர்கள் என்று கூறுவதாக நினைக்காதீர்கள். ஆண் பணி செய்யாவிட்டால், வேலை அவரிடம் இல்லை என்றால் அல்லது சம்பாதிப்பதற்கு பெரிய வழிமுறைகள் இல்லை என்றால் அவர்களுக்கு திருமணமும் செய்து வையுங்கள். பிறகு ஜமாஅத்தில் அத்தகையோருக்கு தொழில் வேலைவாய்ப்பு பெற்றுத்தரும் ஓர் அமைப்பும் நடைமுறையில் உள்ளது; இருக்கவும்

வேண்டும். இதனை செய்தால் – அல்லாஹ் நாடினால், அத்தகைய முயற்சி இருக்கும்போது ஒரு சிலரைத் தவிர மற்றவர்களுக்கு திருமணத்திற்குப் பிறகு தமது மனைவி மக்களை பராமரிக்க வேண்டும்; எனவே ஏதாவது பணி செய்ய வேண்டும்; தொழில் செய்ய வேண்டும்; வேலை செய்ய வேண்டும் என்ற உணர்வு வருகிறது. பிறகு பெரும்பாலான மனைவிகள் கூட தமது கணவன்மார்களை ஏதாவது பணி செய்யுமாறு தூண்டி வேலை செய்வதற்குக் காரணமாகிறார்கள். மனைவிமார்கள் அழுத்தம் கொடுக்கிறார்கள். அதனாலும் கவனம் ஏற்படுகிறது. இதற்குரிய உதாரணங்கள் பல உள்ளன. திருமணத்திற்குப் பிறகு அத்தகைய ஏழைகளின் நிலை மேம்பட்டுள்ளது.

எனவே அல்லாஹ் கூறுகின்றான்: இது அல்லாஹ்வுடைய பணியாகும். எவரது நிலை எவ்வாறு ஆகும் என்பதைக் குறித்து அல்லாஹ்வுக்கு நன்றாகத் தெரியும். ஒருவர் விதவையாக இருந்தாலும் ஏழையாக இருந்தாலும் திருமணம் செய்து வைக்க முயற்சி செய்வது சமுதாயப் பணியாகும். இதனால் சமூகம் பல தீமைகளிலிருந்து தூய்மை அடைகிறது; பாதுகாக்கப்படுகிறது. விதவைகளிலும் பெரும்பாலார் நான் கூறியது போன்று மறுமணம் செய்ய விரும்புகிறார்கள். அதற்குத் தேவையுடையவர்களாகவும் இருக்கிறார்கள். இன்னும் நிறைய பேர் கணவரது மரணத்திற்குப் பிறகு வருவாய் இல்லாமல் உடைந்து போகிறார்கள். சமூகத்தின் பிரச்சனையால் உடைந்து போனவர்களின் நிலை, தமக்கு ஏதாவது புகலிடம் கிடைக்க வேண்டும்; தமக்கு பாதுகாப்பு வேண்டும் என்று விரும்புகிறார்கள். நிரந்தரமான சிரமங்களைச் சகித்து வாழ்வதை விட மறுமணம் செய்து கொள்ளலாம் என்று விரும்புகிறார்கள். எனவே தூய சமூகம் உருவாகவும், அவர்களின்

சுய பிரச்சனைகளைத் தீர்க்கவும் முழுமையாக முயற்சி செய்யுங்கள். மறுமணம் செய்து வையுங்கள். ஆக, இது அல்லாஹ்வின் கட்டளையாகும். நான் கூறியது போன்று சில சமுதாயங்கள் இதனை விரும்புவதில்லை. இஸ்லாமிய, அஹ்மதிய சமூகம் என்று கூறிக் கொண்டு சிலர் விதவையின் மறுமணத்தில் அதிருப்தி கொள்கிறார்கள். எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிரில் நமது நடைமுறைகள் அதாவது பொய்யான நடைமுறைகள் மற்ற மதத்தவர் அல்லது முஸ்லிம் அல்லாதவர்களின் சீர்கெட்ட நடைமுறைகள் மார்க்கத்தின் ஒரு பகுதியாக நமக்கு மத்தியிலும் நுழைந்து கொண்டிருக்கிறது. அதனை அகற்ற வேண்டும்.

அல்லாஹ் விதவைகளுக்கு அவர்களின் கணவர் மரணித்து விட்டால் அவர்களின் இத்தா (நான்கு மாதம் பத்து நாட்கள்) முடிந்த பிறகு உங்கள் விருப்பத்தின்படி மறுமணம் செய்வது தவறில்லை என்று அனுமதி தருகிறான். எவரிடமும் தீர்ப்பு வாங்கவோ பெரியவரிடம் கேட்கவோ எந்தத் தேவையும் இல்லை. ஆனால் நிபந்தனை என்னவென்றால், நடைமுறைக்கு ஏற்ப திருமணம் செய்ய வேண்டும். இவர்களுக்கு மறுமணமாகி விட்டது என்று சமூகத்திற்கு தெரிய வேண்டும். பிறகு எந்தத் தீங்கும் இல்லை. எனவே விதவைகளுக்கு தம்மையும், தமது எதிர்காலத்தையும் குறித்து சுயமே முடிவெடுக்க உரிமை வழங்கப்பட்டுள்ளது. அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் காரணமின்றி தடைகளை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யாதீர்கள் என்று மக்களிடம் கூறியுள்ளான். விதவைகளின் சம்பந்தம், அனுமதிக்கப்பட்ட நல்ல நடைமுறையில் இருந்தால் அல்லாஹ் அனுமதி தருகின்றான். உங்கள் மீது எந்தப் பாவமும்

இல்லை. நீங்கள் உங்களை குடும்பத்தில் பெரியவர் என்று கருதிக் கொண்டு அல்லது பெரிய சம்பந்தத்தைக் காட்டி, இந்த சம்பந்தம் சரியில்லை; இது கூடாது; பொருத்தமானது இல்லை என்று கூறி தடை போடாதீர்கள். விதவைக்கு சுயமே முடிவெடுக்க உரிமை உள்ளது. உங்கள் மீது எந்த வகையான பொறுப்பும் கிடையாது. அல்லாஹ் உங்கள் உள்ளங்களிலுள்ள எண்ணங்களை அறிகின்றான். நீங்கள் ஏதாவது காரணத்தால் நல்ல எண்ணத்துடன் இந்த தடை போடுகிறீர்கள் எனில் அல்லது இந்த சம்பந்தம் கூடாது என்று நினைக்கிறீர்கள் என்றால் அதிகபட்சமாக உங்கள் உள்ளத்தில் உள்ளதை வெளிப்படையாகத் தெரிவியுங்கள். அத்துடன் விலகி விடுங்கள். முடிவெடுக்கும் பொறுப்பை விதவைகளிடமே விட்டு விடுங்கள். அல்லாஹ் உங்கள் உள்ளங்களின் நிலையை அறிகிறான். அவனுக்கு உங்கள் நிய்யத் தெரியும். எவ்வாறிருப்பினும் அவர்களுடைய விவகாரத்தில் உங்களிடம் கேள்வி கணக்குக் கேட்கப்படாது. உங்களிடம் நல்லெண்ணம் இருந்தால் நல்ல நிய்யத்திற்கு கூலி கிடைக்கும்.

இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:

وَالَّذِيْنَ يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَ يَذَرُوْنَ اَزْوَاجًا يَّتَرَبَّصْنَ بِاَنْفُسِهِنَّ اَرْبَعَةَ اَشْهُرٍ وَّعَشْرًا ۚ فَاِذَا بَلَغْنَ اَجَلَهُنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيْمَا فَعَلْنَ فِيْٓ اَنْفُسِهِنَّ بِالْمَعْرُوْفِ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ

உங்களில் ஒருவர் மரணமடைந்து விதவைகளை விட்டுச் சென்றால் அவர்கள் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் தங்களைத் தடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். எனவே, அந்த குறிப்பிட்ட காலம் கழிந்து விட்டால் அப்பெண்கள் தமக்காக ஒரு

நல்ல முடிவு எடுத்தால் அதில் எந்தப் பாவமும் இல்லை. மேலும் நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன் ஆவான். **(2:235)**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதுபற்றி கூறுகின்றார்கள்: விதவைகளின் மணம் குறித்த கட்டளையானது, கன்னிப் பெண்களின் திருமணத்திற்கான கட்டளையைப் போன்றதே. சில சமுதாயங்கள் விதவைகள் மறுமணம் செய்வது கண்ணியத்திற்கு மாற்றமானது என்று கருதுகின்றனர். இந்த தீய சம்பிரதாயம் அதிகம் பரவி விட்டது. விதவைகளின் மறுமணம் குறித்த கட்டளை உள்ளது. ஆனால் அதன் பொருள் ஒவ்வொரு விதவையையும் மணமுடித்து வைக்க வேண்டும் என்பதல்ல. திருமணம் என்பது செய்து வைக்கத் தகுதியானவர்களுக்கும், அதன் அவசியம் உள்ளவர்களுக்குமே ஆகும். சில பெண்கள் வயது முதிர்ந்து விட்ட பிறகே விதவை ஆகிறார்கள். சிலர் மற்ற சூழ்நிலைகளால் மணம் செய்யத் தகுதி இல்லாமல் இருப்பர். உதாரணமாக ஒருவருக்கு ஒரு வகை நோய் வந்துள்ளது. அதனால், அந்தப் பெண் திருமணம் செய்யத் தகுதியானவராகவே இருப்பதில்லை. அல்லது கணிசமான குழந்தைகள் மற்றும் தொடர்புகளால் மறுமணம் செய்ய உள்ளம் விரும்புவதே இல்லை எனில் அந்நிலையில் பெண்களை வலுக்கட்டாயமாகப் பிடித்து ஒரு கணவரிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆம்! விதவைப் பெண்களை வாழ்நாள் முழுக்க கணவன் இல்லாமல் நிர்பந்தமாக வைப்பது என்ற தீய சம்பிரதாயத்தை அழிக்க வேண்டும்.

*(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 320 புதிய வெளியீடு)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதற்கு விளக்கம் தந்து விட்டார்கள். மேலும், தெளிவாகக் கூறி

விட்டார்கள். முதல் விஷயம், சமூகம் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கான கட்டளை, திருமண வயதில் ஒரு பெண் விதவையாகி விட்டால் அவருக்கு மறுமணம் செய்து வைக்க எவ்வளவு முயற்சி செய்ய வேண்டும் எனில், கன்னிப் பெண்களுக்கு, இளம் வயது பெண்களுக்கு திருமணம் செய்து வைக்க எவ்வளவு முயற்சி செய்வீர்களோ அவ்வளவு முயற்சி செய்ய வேண்டும். இது உங்களுக்கு கண்ணியக் குறைவு அல்ல. மாறாக உங்கள் கண்ணியம் இதில்தான் உள்ளது. இரண்டாவது விஷயம், ஒருவர் வயது கூடி விட்டதால் அல்லது பிள்ளைகள் அதிகம் இருப்பதால் அல்லது வேறு சில காரணத்தால் அல்லது ஏதாவது நோயால் மறுமணம் செய்ய விரும்பவில்லை எனில் அதற்காக முடிவு எடுப்பதும் அந்தப் பெண்ணின் பணியே ஆகும். நீங்கள் ஓர் ஆலோசனை வழங்கி விட்டு விலகிக் கொள்ளுங்கள். அதாவது, சம்பந்தம் செய்து வைப்பதற்காக – அதனை தடுப்பதற்காக அல்ல. ஆலோசனை மட்டும் கூறி விட்டு விலகிக் கொள்ளுங்கள். திருமணம் செய்வது அல்லது செய்யாமல் இருப்பது அவர்களின் முடிவு ஆகும். இது அவர்களின் சொந்த உரிமையாகும். எவ்வகையிலும் அவர்களைப் பலவந்தப்படுத்தக் கூடாது. பிறகு, சமூகம் அல்லது உறவினர்களுக்கும் ஒரு பெண்ணை பலவந்தமாக வாழ்நாள் முழுக்க விதவையாக இருக்க வைப்பதற்கோ விதவையாக இரு என்று கூறுவதற்கோ எந்த உரிமையும் இல்லை. தாமே முன்வந்து விருப்பத்துடன் மறுமணம் செய்ய விரும்பினால் திருக்குர்ஆனின் கட்டளையின் படி மணம் செய்து வையுங்கள். ஒரு விதவையை மணம் செய்வதிலிருந்து தடுப்பதும் பெரும் வீணான அசுத்தமான சம்பிரதாயமாகும். அதனை உங்களிடமிருந்து அகற்றி விடுங்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அலீ பின் அபிதாலிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரிடம் மூன்று முறை கூறினார்களாம். அலீயே! தொழுகை நேரம் வந்தால் தாமதிக்காதீர். அது போன்று ஒரு ஜனாஸா வந்தால் அல்லது ஒரு விதவைப் பெண்ணுக்கு பொருத்தமான வரன் அமைந்தால் அவற்றையும் தாமதிக்காதீர்.

(*திர்மிதி. கிதாபுஸ் ஸலாத். பாபு ஃபில் வக்தில் அவ்வல்*)

இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதனைக் குறித்து இரு விஷயங்களைக் கூறியுள்ளார்கள். அதனை இறைவணக்கத்துடன் இணைத்துள்ளார்கள். தொழுகை அல்லாஹ்வின் முன் குனிவது, அவனுக்கு இபாதத் செய்வது, இது ஒரு ஃபர்ள் ஆகும். வணங்கும் நோக்கத்தில் மட்டுமே மனிதன் படைக்கப்பட்டுள்ளான். அதனைக் குறித்த நேரத்தில் நிறைவேற்ற கட்டளை உள்ளது. தொழுகை நேரம் வந்து விட்டால் பிற்படுத்தக் கூடாது. அதில்தான் நமக்கு நன்மை உள்ளது.

மேலும், தூய சமூகத்தின் உத்திரவாதம் அல்லாஹ்வுடைய வணக்கத்தைக் குறித்த நேரத்தில் நிறைவேற்றுவதில் உள்ளது எனில் அதற்குப் பிறகு ஒருவர் மரணித்தால் அவரை அடக்கம் செய்வதற்கு விரைவுபடுத்த வேண்டும். மரணித்தவருக்கு அதில்தான் கண்ணியம் உள்ளது. மேலும் சில குடும்பங்களில் நீண்ட நேரம் ஜனாஸாவை வைப்பதால் பிரச்சனை வருகின்றன. எனவே விரைவாக அடக்கம் செய்யுங்கள்.

பிறகு கூறினார்கள்: பெண் விதவையாகி மறுமணத்திற்கு தகுதியானவராகவும் இருந்தால் அவருக்கு பொருத்தமான வரன் அமைந்தால் அவ்வரன் சமூகத்தில் அப்பெண்ணுக்குரிய

அஸ்தஸ்துக்கேற்ற இடமாக இருந்தால் குடும்ப அளவில், தமது வசதி வாய்ப்புகளின் அடிப்படையில் பொருத்தமாக இருந்தால் பெண்களுக்கு விருப்பம் இருந்தால் உறவினர்கள் தடைபோடக் கூடாது. அவருக்கு விரைவில் திருமணம் செய்து வைப்பதே சிறந்தது. அதனால்தான் தூய சமூகம் நிலைபெறும். மேலும் பெண்ணும் கூட விதவையானதால் சமூகத்தில் இருந்து கேட்டு சகித்துக் கொள்ள வேண்டிய பல விஷயங்களிலிருந்தும் தப்பித்து விடுவார். மேலும் விதவைக்கு சுயமே சுதந்திரம் தரப்பட்டுள்ளது. அவர் அனுமதிக்கப்பட்ட முறையில் மறுமணம் செய்து கொள்ள முடியும். அது திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகிறது. இதுவும் கூட அவர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆகும்.

இந்த சுதந்திரம் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது. இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு விதவை தமது மறுமணம் சம்பந்தமாக தாமே முடிவெடுக்க தமது காப்பாளரை விட அதிக உரிமை பெற்றுள்ளார். கன்னிப் பெண்களிடம் சம்மதம் கோரப்படும். அவரது மவுனம் சம்மதமாகக் கருதப்படும்.

(*சுனன் தாரிமி. கிதாபுன் நிகாஹ் பாபு இஸ்திஃமாரில் பிக்ர வஸ்ஸய்யிப்*)

எனவே, எவ்வாறிருப்பினும் விதவைகளின் உரிமை முதன்மையானது என்று தெளிவாகி விட்டது. ஆனால் கன்னிப் பெண்கள் விஷயத்தில் ஒரு நிபந்தனை உள்ளது. அவரைக் குறித்து ‘வலி’ (காப்பாளர்) முடிவெடுக்க வேண்டும். காரணம் அல்லாஹ்வின் கட்டளைகளின் அசல் நோக்கம் சமுதாயத்தில்

நன்மை மற்றும் அமைதியை உருவாக்குவதாகும். பிறகு விதவை உலகில் அனுபவப்பட்டு விட்டதால் வாழ்வில் மேடு பள்ளங்களைப் பார்த்து விட்டதால் அல்லாஹ் நாடினால் சிந்தித்து முடிவெடுக்க முடியும். எனவே, அவருக்கு சுதந்திரம் தரப்பட்டுள்ளது. ஆனால் கன்னிப்பெண் சில வேளை வெகுளித்தனத்தால் தவறான முடிவெடுத்து விடலாம். எனவே அவருக்காக முடிவெடுக்க காப்பாளருக்கு உரிமை தரப்பட்டுள்ளது. ஆனால், அதற்குப் பிறகும் கூட அவர்களுக்கு தமது தந்தை அல்லது காப்பாளரின் முடிவில் கருத்து வேறுபாடு இருந்தால், அது அவருக்கு பிடிக்கவில்லை எனில் ஜமாஅத் அமைப்புக்கு தெரியப்படுத்த வேண்டும். ஜமாஅத்தின் முடிவை பெற்றுக் கொள்ளலாம். ஆனால், தாமே செயலளவில் காலெடுத்து வைக்க அனுமதி இல்லை. அவ்வாறு செய்தால் சமூகத்தில் நன்மைக்குப் பதில் குழப்பம் ஏற்படும் ஆபத்து உள்ளது. பலமுறை அவ்வாறு நடந்துள்ளது. சில இளம் பெண்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து தந்தையார் எங்களுக்கு இன்ன இடத்தில் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார் என்றதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினார்கள். சில நேரங்களில் இவ்வாறும் நடந்தது. இளம்பெண்கள் எங்களுக்கு இதில் விருப்பமில்லை என்று கூறியுள்ளனர். இந்த வகையில் ஒருமுறை ஓர் இளம்பெண் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து பெண்களாகிய எங்களுக்கு வரன் விஷயத்தில் எந்த உரிமையும் இல்லையா? என்று கேட்டார். அன்னார் முற்றிலும் உண்டு என்றதும் அப்பெண், என் தந்தையார் என்னை இன்ன கிழவருடன் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார் அல்லது செய்கிறார் என்றதும் அன்னார் முடிவு

எடுக்க உமக்கு அனுமதி உண்டு என்றார்கள். அந்த நல்ல இளம்பெண் நான் பெண்களின் உரிமையை நிலைநாட்டவே விரும்பினேன். என் தந்தையின் உள்ளத்தை உடைக்க விரும்பவில்லை. எனக்கு எனது தந்தையிடம் மிகவும் அன்பு உள்ளது. அந்த வரனிடமே திருப்தி அடைகிறேன். எனினும் நான் பெண்களின் உரிமையை நிலைநாட்டவே வந்தேன் என்று கூறினார்.

ஒருமுறை ஒரு தந்தை முடிவு செய்த சம்பந்தத்தை, அது, அந்த இளம்பெண்ணின் விருப்பத்திற்கு எதிராக இருந்ததால் முறித்தார்கள். இந்த வகையில் ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு பெண்ணின் கணவர் இறந்து விட்டார். அவர் மூலம் ஒரு குழந்தையும் இருந்தது. குழந்தையின் சிறிய தந்தை அப்பெண்ணின் தந்தையிடம் விதவையைப் பெண் கேட்டார். பெண் விருப்பத்தை வெளிப்படுத்தினார். ஆனால் பெண்ணின் தகப்பனார் அப்பெண்ணை அவளது விருப்பத்திற்கு மாற்றமாக இன்னோர் இடத்தில் முடித்து விட்டார். உடனே அப்பெண் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து முறையிட்டார். அன்னார் அப்பெண்ணின் தந்தையை அழைத்துக் கேட்டார்கள். அப்பெண்ணின் தந்தை அவளுக்கு அவளது கொளுந்தனை விட சிறந்த மனிதருடன் மணம் செய்து வைத்துள்ளேன் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தந்தை பேசி முடித்த சம்பந்தத்தை முறித்து குழந்தையின் சிறிய தந்தையுடன் அதாவது பெண்ணின் கொளுந்தனுடன் திருமணம் செய்து வைத்தார்கள்.

(*முஸ்னது அல் இமாமுல் அஃஸம். கிதாபுன் நிகாஹ்*)

இங்கு விதவையின் உரிமையே முதன்மையானதாக இருந்தது. எனவே அதை நிலைநாட்டினார்கள். இரண்டாவது, விதவையின் திருப்தியையும் பார்க்க வேண்டியது இருந்தது. ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொருத்தவரையில் பெண் எங்கு மணம் முடிக்க விரும்புகிறாரோ, மணம் செய்கிறாரோ அந்தப் பையன் எவ்வாறிருப்பினும் அஹ்மதியாக இருக்க வேண்டும் என்று கண்டிப்பாகப் பார்க்கப்படும். ஏனெனில் இந்த அனைத்து விஷயங்களின் நோக்கம் தூய சமூகம் உருவாக்குவதற்காகவே ஆகும். நன்மையை நிலைநாட்டுவது மற்றும் நல்ல சந்ததிகளைப் பெறுவதே ஆகும். அஹ்மதி பையன்கள், அஹ்மதி பெண்களை விட்டு விட்டும், அஹ்மதி பெண்கள், அஹ்மதி பையன்களை விட்டு விட்டும் பிறருடன் திருமணம் செய்வதால் சமூகத்தில், குடும்பத்தில் குழப்பம் ஏற்படும் அபாயம் உருவாகும். புதிய சந்ததிகள் மார்க்கத்தை விட்டு விலகும் அபாயம் ஏற்பட்டு விடும். எனவே, மார்க்கத்தின் மணப்பொருத்தம் உலகியல் பொருத்தம் பார்ப்பது போன்று அவசியமானதே ஆகும். நமது பையன்களுக்கும் பெண்களுக்கும் அஹ்மதி அல்லாத பிறருடன் திருமணம் செய்வதற்கு அதிக கவனம் ஏற்படுகிறது. குறிப்பாக இந்த சுதந்திரமான சமூகத்தில் இதன் பக்கம் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகும். ஜமாஅத் அமைப்பிற்கும் இதனாலேயே பெரும் கவலை உருவாகி உள்ளது. தமது விருப்பம் போல் பிறருடன், பிற மதத்தவருடன் திருமணம் செய்ய ஏற்பாடு செய்கின்றனர் என்ற விவகாரம் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ ஹாதம் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களிடம் மார்க்கப் பற்றுள்ள நல்லொழுக்கமுள்ள

பிடித்தமான வரன் கொண்டு வரப்பட்டால் சம்பந்தம் செய்யுங்கள். அவ்வாறு இல்லையென்றால், பூமியில் குழப்பமும் கிளர்ச்சியும் ஏற்படும். கேள்வி கேட்பவர் கேள்வி கேட்க விரும்பினார். ஆனால், அன்னார் மூன்று முறை, உங்களிடம் ஒரு வரன் கொண்டு வரப்பட்டால் அவர்களின் மார்க்கப்பற்றும், நல்லொழுக்கமும் உங்களுக்கு பிடித்திருந்தால் திருமணம் செய்து கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். (*திர்மிதி. கிதாபுன் நிகாஹ்*)

இவ்வாறு அன்னார் மார்க்கப் பற்றுள்ள பையனுடன் சம்பந்தம் செய்யுமாறு கவனமூட்டியுள்ளார்கள். பொருளாதார பலவீனம் இருந்தால் அல்லாஹ்வின் வாக்குறுதி உள்ளது. மார்க்கத்தில் நிலை நின்றால் அல்லாஹ் பொருளாதார நிலையைச் சரிசெய்வான். எனவே, இளம் பெண்களுக்கு வரன் வரும்போது மிகவும் காலதாமதம் செய்ய வேண்டாம். மாறாக, மார்க்கப் பற்று விஷயத்தில் திருப்தி இருந்தால் மணம் செய்து வைத்து விட வேண்டும். அது போன்று பையன்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள். திருமணம் செய்யும் போது இளம் பெண்களின் வெளிப்படையான உலகியல் நிலையை மட்டும் பார்க்காதீர்கள். இந்த தகுதியை மட்டும் பார்க்காமல் அவளிடம் எவ்வளவு நல்ல விஷயங்கள் உள்ளன என்று பாருங்கள்.

இந்த வகையில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு பெண்ணுடன் திருமணம் செய்ய விரும்பினால் அதற்கு நான்கு அடிப்படைகள்தான் உள்ளன. செல்வத்தினால் அல்லது குடும்பத்தினால் அல்லது அழகு, வசீகரம் காரணத்தால் அல்லது மார்க்கப்பற்றினால் செய்யப்படலாம். ஆனால் நீர்

மார்க்கப்பற்றுள்ள பெண்ணுக்கு முன்னுரிமை வழங்குங்கள். அல்லாஹ் உமக்கு நன்மையையும் நல்ல மார்க்கப்பற்றுள்ள பெண்ணையும் தருவானாக.

*(புகாரீ. கிதாபுன் நிகாஹ் பாபு அல் அக்ஃபா ஃபித்தீன்)*

இவ்வாறு கவனமூட்டி வருங்கால சந்ததிகளுக்கு மார்க்கப்பற்றுக்கான வெளிப்படையான வழிவகைகளின் பக்கம் கவனமூட்டினார்கள். தமது வீட்டின் சூழ்நிலையை அமைதியாக ஆக்குவதற்கு கவனமூட்டினார்கள். ஏனெனில், தாய் நல்ல மார்க்கப்பற்றுள்ளவளாக இருந்தால் பொதுவாக சந்ததிகளும் மார்க்கப்பற்றுடன் இருப்பர். நன்மை மற்றும் மார்க்கப்பற்றுள்ள குழந்தைகளை விட பெரிய செல்வம் இல்லை. அதன் மூலம் மனிதனுக்கு நிம்மதி கிடைக்கிறது. ஒரு நம்பிக்கையாளருக்கு சமூகத்தில் கண்ணியம் என்பது நன்மை மற்றும் மார்க்கப் பற்றுள்ள சந்ததிகளால்தான் கிடைக்க முடியும். இதன் பக்கம் ஒவ்வோர் அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டும். இளம்பெண் நல்லவள்தான்; கண்ணியமாளவள்தான்; நல்லொழுக்கம் உள்ளவள்தான்; படித்த பெண்தான்; ஜமாஅத் பணிகளில் பங்கு பெறுகிறாள்தான் என்றாலும் அழகு சற்று குறைவு அல்லது வரன் தேடுவோரின் எதிர்பார்ப்பிற்கேற்ப உயரம் இருப்பதில்லை. மக்கள் வந்து பார்த்து விட்டுப் போய் விடுகின்றனர் என்ற புகார் மிகவும் பொதுவாக ஆகி வருகின்றது. இது பற்றியும் முதலில் கவனமூட்டினேன். உருவம், உயரம் ஆகியவற்றை புகைப்படம் மூலம் அறிய முடியும். பிறகு வீட்டில் சென்று பெண்களைப் பார்த்து சிரமப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? எனவேதான் இவற்றைப் பார்க்காதீர்கள்; மார்க்கப்பற்றைப் பாருங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளை உள்ளது.

எனவே, உங்கள் சந்ததிகளை பராமரிக்க மார்க்கப்பற்றைப் பாருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பெண்களின் மார்க்கப்பற்றைப் பார்த்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய துஆவுக்கு வாரிசாவீர்கள். பிறகு உங்கள் சந்ததிகளையும் மார்க்கத்தில் நிலைநிற்பவர் –களாகக் காண்பீர்கள்.

சிலர் வரன் பார்க்கும் போது இளம்பெண்களை குர்பானி ஆட்டை உற்று கவனிப்பது போன்று பார்க்கின்றனர். திருமணம் என்பது ஓர் ஒப்பந்தம் ஆகும். ஒரு தரப்பின் தியாகத்தின் பெயரல்ல. மாறாக இரு தரப்பும் ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்வதன் பெயராகும். இது அத்தகைய பிணைப்பு ஆகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “உலகம் வாழ்வதற்குரிய இடமாகும். மேலும் நல்ல பெண்களை விட ஓர் அழகிய வாழ்விடம் வேறு இல்லை.”

*(இப்னு மாஜா அப்வாபுன் நிகாஹ் பாபு அஃப்ஸலுன் நிஸா)*

எனவே, ஒவ்வொரு பொருளையும் உலகியல் அளவில் நிறுத்துப் பார்க்கின்றவர்கள் இந்த ஹதீஸை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு நல்ல பெண்ணை விட உங்களுக்கு வாழ்க்கைக்கான ஓர் உலகியல் பொருள் இல்லை. நல்ல பெண் உங்கள் வீட்டைப் பராமரிப்பார். உங்கள் குழந்தைகளுக்கு உயர்ந்த தர்பிய்யத் (மார்க்கப் பயிற்சி) வழங்குவார். விளைவு நீங்கள் உலக மற்றும் மார்க்க நன்மைகளைப் பெறுவீர்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள்

கூறினார்கள்: “ஸாலிஹான ஆணுக்கு ஸாலிஹான பெண்ணைத் திருமணம் செய்து வையுங்கள்.” *(சுனன் தாரிமீ. கிதாபுன் நிகாஹ் பாபு ஃபின் நிகாஹுஸ் ஸாலிஹீன்)*

ஆகவே இதிலும் கூட நல்ல பையனுக்கும் பெண்ணுக்கும் திருமணம் செய்து வைக்குமாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இப்பணி சமூகத்தைக் குழப்பத்திலிருந்து காப்பாற்ற சிறந்த வழியாகும். எனவே இதில் விரைவு தேவை. ஆனால், தற்போது சிலவேளை பார்க்க முடிகிறது. பலர் அவ்வாறு உள்ளார்கள். பெற்றோருடன் பையன்கள் வருகின்றார்கள். பையன்களுக்கு **34–35** வயது ஆகி இருக்கிறது. ஆனால் அவர்களை தம்முடன் பெற்றோர் வைத்துள்ளனர். திருமணம் செய்து வைக்கவில்லை. திருமணத்தின் பக்கம் கவனம் செலுத்துவதே இல்லை.

சிலர் இவ்வாறு இருக்கின்றனர். மகள்களின் வருமானத்தில் இருந்து உண்ணுகின்றனர். எனவே அவ்வாறு வைத்திருக் –கிறார்கள். சிலர் மகன்களின் சம்பாத்தியத்தில் சாப்பிடுவதற்காக அவ்வாறு வைத்திருக்கின்றனர். மகள்களின் சம்பாத்தியத்தில் சாப்பிடுபவர்கள் அவ்வாறு செய்யக் காரணம் வீட்டில் பையன்கள் வெட்டியாக இருக்கிறார்கள். பணி எதுவும் செய்வதில்லை. படிப்பும் இருப்பதில்லை. எனவே, வீடு மகள்களின் சம்பாத்தியத்தில் இயங்குகிறது. திருமணம் செய்து வைத்தாலும் கூட மருமகன் வீட்டோடு மாப்பிள்ளையாக வர வேண்டும். வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். இது பெரும்பாலும் சாத்தியம் இல்லாமல் போகிறது. இதனால் வீட்டில் சண்டை சச்சரவு வருகிறது. எனவே, திருமணம் செய்து வைத்த பிறகு கணவன் மனைவி தனிக்குடித்தனம் செல்ல விரும்புகின்றனர்

என்றால் அவர்களுக்கு வாய்ப்பும் உள்ளது. பெற்றோரும் கூட வாழ்வில் கடைசி நிலையில் இருப்பதில்லை. உதவிக்கு ஆள் தேவைப்படும் என்றாலோ அல்லது வேறு பையன் அருகில் இல்லை என்றாலோ வேறு விஷயம். அப்போது தியாகம் செய்தே ஆக வேண்டும். இதுவும் கூட பையன்களின் பணியாகும். ஒருவருக்கு மகன்கள் இல்லை எனில் பெண் மக்களுக்கு நிர்பந்தமாகும். ஆனால், பொதுவாக பெண்கள் திருமணமாகி மற்றவர் வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டால், அப்பெண்ணை தனிக்குடித்தனம் நடத்திக் கொள்ள விட்டு விட வேண்டும். அப்பெண் தமது வீட்டைத்தான் கவனிக்க வேண்டும். இதில் நமது ஜமாஅத்தின் மூன்று கிளை அமைப்புகளும் லஜ்னா, குத்தாம், அன்ஸார் கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு தம் சார்பாக தர்பிய்யத்தின் கீழ் புரிய வைக்க வேண்டும். அன்ஸார், பெற்றோருக்குப் புரிய வையுங்கள். லஜ்னா, பெற்றோருக்கும் இளம் பெண்களுக்கும் புரிய வையுங்கள். குத்தாம், பையன்களுக்குப் புரிய வையுங்கள்.

பிறகு ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் முகைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அவர்கள் ஓரிடத்தில் பெண் வேண்டி தூது அனுப்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மணப்பெண்ணைப் பார்த்துக் கொள்ளுமாறும், அவ்வாறு பார்ப்பதால் உங்களுக்கும் அவர்களுக்கும் ஒற்றுமையும் பிணைப்பும் ஏற்பட அதிகம் சாத்தியம் உண்டு என்றும் கூறினார்கள்.

(*திர்மிதி கிதாபுன் நிகாஹ். பாபு ஃபின்னளரி இலல் மக்தூபத்*)

இந்த அனுமதியைக் கூட தற்கால சமூகத்தில் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். இதன் பொருள், ஒருவர் மற்றவரைப்

புரிந்து கொள்வதற்காக எப்போதும் தனியாக அமரலாம்; உலா வரலாம்; அடுத்த ஊருக்குச் செல்லலாம்; தவறில்லை என்றும், வீடுகளில் தனிமையில் பல மணி நேரங்கள் சேர்ந்து அமரலாம் என்றும் கருதுகின்றனர். இது தவறாகும். இதன் பொருள் என்னவெனில், எதிரெதிரே அமர்ந்து ஒருவர் மற்றவரின் உருவத்தைப் பார்ப்பது, ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள எளிய வழியாகும். சில அசைவுகளை பேசும் போது தெரிந்து கொள்ள முடியும். பிறகு தற்காலத்தில் வீட்டினருடன் அமர்ந்து உணவு உண்பதும் கூட தவறில்லை. உணவு உண்ணும்போது ஒருவர் மற்றவரைப் பற்றியும், அவரது செயல்கள் பழக்க வழக்கங்கள் பற்றியும் வெளிப்படும். ஏதாவது ஒரு விஷயம் பிடிக்காமல் இருந்தால், முதலிலேயே பார்த்துக் கொள்ளலாம். பிறகு சண்டை இருக்காது. நல்ல விஷயங்கள் இருந்தால் அந்த சம்பந்தத்துடன் அல்லது சம்பந்த செய்தியுடன் இணக்கமும் அன்பும் அதிகமாகவே ஏற்படும். இவ்வாறு ஒரு தொடர்பு திருமணத்திற்கு முன் ஏற்படும்.

சிலரது நடைமுறை எவ்வாறு உள்ளது எனில் ஒரு சம்பந்தம் முடிவாகி விட்டால் அதனை முறிக்க முயல்வர். எதிரெதிரே அமர்வதால் அதற்கு சந்தர்ப்பம் அமையாது. ஒருவர் மற்றவரின் நடவடிக்கைகளைப் பார்த்து ஒருவர் மற்றவரை அறிந்து இருப்பர். ஆனால், சிலர் மற்ற பக்கம் அளவு கடந்து போய் விடுவர். அவர்களுக்கு பையனும் பெண்ணும் திருமணத்திற்கு முன் எதிரெதிராக அமர்ந்திருப்பதைச் சகிக்க முடியாமல் அதற்கு தன்மானம் என்று பெயர் வைக்கிறார்கள் எனில் இஸ்லாமிய போதனை ஒரு நடுத்தர போதனையாகும். இதில் கூடுதலோ

குறைவோ இல்லை. அதனையே செயல்படுத்த வேண்டும். இதனால் சமூகத்தில் அமைதி ஏற்படும். சமூகத்தில் குழப்பம் அகலும்.

பிறகு ஓர் அறிவிப்பு ஹஸ்ரத் மஅகில் பின் யஸார் அறிவிக்கிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “நேசிக்கத் தெரிந்த பெண்ணை திருமணம் செய்யுங்கள். அவர்களால் நிறைய சந்ததிகள் உருவாகும். அதிக நபர்களின் காரணமாக முன்னுள்ள சமுதாயத்தினர் மீது நான் பெருமிதம் கொள்வேன்.” *(அபூதாவூது. கிதாபுன் நிகாஹ், பாபு தஸ்வீஜில் அப்கார்)*

ஆகவே, அதிக குழந்தையுடைய பெண்களுக்கு அவர்களின் குழந்தைகளின் காரணமாக அன்னார் இந்த அந்தஸ்தையும் வழங்கியுள்ளார்கள். ஏனென்றால், அவர்கள் உம்மத்தின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாக இருக்கின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவதன் பொருள், எண்ணிக்கையை அதிகமாக்குங்கள்; உறுப்பினர்கள் அதிகமாக வேண்டும் என்பதன்று. மாறாக, நன்மை மிக்க சந்ததிகளை அதிகமாக்குங்கள் என்பதாகும். அவர்கள் இறைக் கட்டளைகளுக்கு ஏற்ப செயல்படுபவர்களாகவும் இருக்க வேண்டும். அதனால்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெருமிதம் கொள்ள முடியும். இதில் பெண்களுக்கு பொறுப்பு உள்ளது. குழந்தைகளால் மட்டும் பெருமிதம் கொள்ளாதீர்கள். மாறாக, அவர்களை நன்மையில் செல்லும் சந்ததிகளாக்குங்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உம்மத் என்று கூறுவதில் பெருமிதம் ஏற்படத்தக்கவர்களாக இருக்க வேண்டும். எனக்கும் அத்தகைய பெண்கள் குறித்து பெருமிதம் உள்ளது என்று அன்னார்

கூறுகிறார்கள். எனவே, அதிக சந்ததிகளையும் நன்மையில் நிலைநிற்கும் மக்களாக அவர்களை ஆக்கிய பெண்கள் குறித்து பெருமிதம் உண்டு என்கிறார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் திருமணம் செய்யுமாறு அறிவுறுத்தினார்கள். இன்னும் சொல்வதாயின், மீண்டும் மீண்டும் கவனமூட்டினார்கள். சிலவேளை ஓர் வரன் முடிவாகும்போது தாமே மனமகிழ்வுடன் அதற்காக ஏற்பாடு செய்வார்கள்.

இவ்வாறு ஓர் அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் ரபீஆ அஸ்லமீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: (நீண்ட அறிவிப்பு) முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலில் வருகிறது. அதன் சுருக்கம் இவ்வாறாகும். ஹஸ்ரத் ரபீஆ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சேவை செய்து வந்தபோது ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவரிடம் 'ரபீஆ! நீர் திருமணம் செய்யவில்லையா?' என்று கேட்டார்கள். அவர் 'இல்லை' என்றார். சிறிது காலம் கழித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'ரபீஆ திருமணம் செய்யவில்லையா?' என்றபோது, அவர் 'இல்லை' என்று மீண்டும் கூறினார். ரபீஆ தாமே யோசித்தார். எனது நன்மை தீமைகளை அறிந்தவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான். எது நல்லது? எது தீயது? என்று அன்னாருக்குத் தான் தெரியும். இனி அவ்வாறு கேட்டால் நான் 'ஆம்' என்று கூற வேண்டும் என்று நினைத்தேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்றாம் முறையும் கேட்டபோது அவர் 'ஆம்' என்று பதில் கூறினார். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸாரின் இன்ன

குடும்பத்தாரிடம் சென்று இன்ன பெண்ணை உமக்கு திருமணம் செய்து வைக்குமாறு எனது தூதுச் செய்தியை வழங்குங்கள் என்றார்கள். இந்த வகையில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தியைக் கேட்டதும் அவர் உடனே ஒப்புக் கொண்டார். அந்தப் பெண்ணுடன் அவருக்கு திருமணம் ஆனது. உடனே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வலிமாவுக்கு தாமே ஏற்பாடு செய்தார்கள். தாமும் வலிமாவில் பங்கு பெற்றார்கள். துஆவும் செய்து வைத்தார்கள்.

(*முஸ்னது அஹ்மது பின் ஹம்பல்*)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அறியாமைக் காலத்தில் இருந்த ஒரு வழக்கப்படி ஒருவரிடம் அனாதை இளம்பெண் இருந்தால் அவர் மீது ஒரு துணியைப் போடுவார்கள். அவர் துணியைப் போட்டு விட்டால் வேறு எவருக்கும் அப்பெண்ணைத் திருமணம் செய்ய உரிமை இல்லை. அவர் அழகும் செல்வமும் கொண்டவராக இருந்தால் தாமே மணம் செய்து அப்பெண்ணின் அச்செல்வத்தை உண்பார். அவளது அழகும் உருவமும் நன்றாக இல்லை என்றால், பொருள் வசதி படைத்திருந்தால் அம்மனிதர் அவளை வாழ்நாள் முழுக்க தன்னிடம் தடுத்து வைத்துக் கொள்வார். அவள் மரணிக்கும் வரை வைத்துக் கொள்வார். அவள் மரணித்தால் அவள் விட்டுச் சென்ற செல்வத்திற்கு அவர் தாமே வாரிசாகி விடுவார்.

இதுவே அரபிகளின் நிலையாக இருந்தது. இதனால்தான் அல்லாஹ் நமக்கு விதவைகளின் அனாதைகளின் திருமணத்தின் பால் கவனமூட்டியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மனமகிழ்ச்சியுடன் தாமே முன் வந்து தம்முடைய

ஆண் சஹாபிகளுக்கும் பெண் சஹாபிகளுக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். இந்தக் கட்டளையின்படி செயல்பட வைத்தார்கள். பருவ வயதை அடைந்ததும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்கள். விதவைகள் இளவயதினர் எனில் அல்லது திருமணம் செய்வதை விரும்பினால் அவர்களுக்கு திருமணம் செய்து வையுங்கள். உலகியல் பயன் அடைவதற்காக வீடுகளில் பெண்களை உட்கார வைக்காதீர்கள். அது போன்று பையன்களையும் திருமணம் செய்ய தாமதம் செய்யாதீர்கள். இப்போது முழு சமூகத்தின் பொறுப்பு என்னவென்றால் திருமணத்திற்கு தகுதி வாய்ந்தவர்களுக்கு திருமணம் செய்து வைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளைகள் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்காலத்தில் மிகவும் கவலையுடன் முயற்சி செய்து வந்தார்கள். சிறப்பான முயற்சியும் கவனமும் செலுத்தினார்கள். அஹ்மதி பெண்கள் மற்றும் பையன்களின் திருமணம் ஜமாஅத்திற்குள்தான் நடக்க வேண்டும். அதனால் வரக்கூடிய சந்ததிகள் மார்க்கத்தில் நிலைத்து நிற்கும் சந்ததிகளாக வேண்டும். அன்னார் ஜமாஅத்தில் சம்பந்தம் செய்வதற்கு பெரும் அறிவுறுத்தல் வழங்கினார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: “அல்லாஹ்வின் அருள் மற்றும் சிறப்பினால் அவனது பெரும் கருணையால் நமது ஜமாஅத்தின் எண்ணிக்கை பெரும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இப்போது ஆயிரக்கணக்கில் பெருகி விட்டது. விரைவில் அல்லாஹ்வின்

அருளால் இலட்சங்களாக மாற உள்ளது.'' இப்போது அல்லாஹ்வின் அருளால் கோடிகள் வரை ஆகி விட்டது. ''இப்போது தேவையான திருத்தம் இவ்வாறு வேண்டும். அவர்களிடம் ஒருவருக்கொருவர் ஒருமைப்பாடு வளர்வதற்கு உறவினர்களின் தீய தாக்கத்தில் இருந்து தப்பிப்பதற்காக பையன்கள் பெண்களின் திருமணம் குறித்து நல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். எந்த மக்கள் எதிரி மல்லவிகளின் நிழலின் கீழிருந்து ஒருதலைப்பட்சமான பகைமையான கருமித்தனமான எதிர்ப்புகளில் முழுமையை எட்டி விட்டார்களோ இனி அவர்களுடன் நமக்கு சம்பந்தங்கள் சாத்தியமற்றது. அவர்கள் தவ்பா செய்து நமது ஜமாஅத்தில் இணையாத வரை முடியாது என்பது வெளிப்படையாகும். மேலும், இப்போது ஜமாஅத்திற்கு எவ்விஷயத்திலும் அவர்களின் தேவை இல்லை. பொருள் செல்வம், அறிவு, மேன்மை, குடும்பம், தூய்மை இறை உணர்வில் முன்னேறுதல் உள்ளவர்கள் இந்த ஜமாஅத்தில் அதிக அளவில் உள்ளனர். மேலும் ஒவ்வோர் இஸ்லாமிய சமூக மக்களும் இதில் இருக்கிறார்கள். இந்நிலையில் நம்மை காஃபிர் என்று சொல்கிறவர்களிடம், நமக்கு தஜ்ஜால் என்று பெயர் வைத்தவர்களிடம், தாம் அவ்வாறு கூறாவிடினும் அவ்வாறு கூறுபவர்களைப் புகழ்ந்து பின்னால் செல்பவர்களுடன் தொடர்பு வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதாவது அவர்கள் அவ்வாறு கூறுவதில்லை. ஆனால், எவர்கள் அவ்வாறு கூறுகிறார்களோ அவர்களைப் புகழ்கிறார்கள்.

மேலும் நினைவில் கொள்ளுங்கள். எவர்கள் அத்தகைய –வர்களை விட முடியாதோ அவர்கள் நமது ஜமாஅத்தில் இணைய தகுதியற்றவர்கள் ஆவர். தூய்மை மற்றும் உண்மைக்காக ஒரு சகோதரன் தமது சகோதரரை விடாதவரை, ஒரு தந்தை தனது

மகனை விடாத வரை அவர்கள் நம்மைச் சார்ந்தவர்கள் இல்லை. எனவே ஜமாஅத்தினர் அனைவரும் கவனத்துடன் கேளுங்கள். நம்பிக்கையாளர்கள் இந்த நிபந்தனையைப் பேணுவது அவசியமாகும். எனவே, வருங்காலத்தில் குறிப்பாக என் கையில் மறைவான முறையில் இரகசியமாக ஒரு நூல் இருக்குமாறு நான் ஏற்பாடு செய்துள்ளேன். அதில் ஜமாஅத்தின் பையன்கள் மற்றும் பெண்களின் பெயர்கள் எழுதப்படும். ஒரு பெண்ணின் பெற்றோரிடம் தமது வட்டத்தில் நிபந்தனைக்குட்பட்ட பையன் இல்லை எனில் நமது ஜமாஅத் பையன் கிடைக்கவில்லை எனில் நன்மை மற்றும் உங்கள் திருப்திக்கேற்ப கிடைக்கவில்லை எனில் அதுபோன்று இந்த சூழ்நிலையில் உள்ள பெண் தேடி கிடைக்கவில்லை எனில் இந்த ஜமாஅத்தில் தேடுவதற்கு அவர்கள் நமக்கு அனுமதி தர வேண்டும். நாம் பெற்றோரின் நம்பத்தகுந்த கவலை கொண்ட மனிதர் போன்று தேடுவோம் எனில் ஒவ்வொருவரும் திருப்தி அடைய வேண்டும். முடிந்தவரை அவர்களின் சமூகத்திலேயே முடிந்தவரை தேடித் தர முயற்சி செய்வோம். கிடைக்கவில்லை எனில் அறிந்தவரை நாம் பொதுவாக சம்பந்தம் செய்கின்ற இடத்தில் தேடுவோம். எல்லாவற்றிலும் அதிகமாக பையன், பெண் நன்னடத்தை கொண்டவர்களாகவும் தகுதியானவர்களாகவும் நன்மையின் தாக்கம் வெளிப்படுத்துபவர்களாகவும் இருக்கிறார்களா என்று அதிகம் கவனித்துப் பார்க்கப்படும். இந்த நூல் மறைவாக வைக்கப்படும். அவ்வப்போது தேவை ஏற்படும்போது தகவல் தரப்படும். அவர்களின் தகுதியும் நேர்மையும் நிரூபணமாகாத வரை எந்த பையன் பெண் குறித்தும் எந்தக் கருத்தும் வெளிப்படுத்துதல் கூடாது.

சிலர், நீங்கள் முன் வந்து முதலில் கூறுங்கள் என்று கேட்கின்றனர். எனவே மாசற்ற மக்கள் தமது சந்ததிகளின் பட்டியலை பெயர்களை வயது, சமூகம், விபரங்களுடன் அனுப்பினால் அந்த நூலில் எழுதப்படும்.''

(*மஜ்முஆ இஷ்திஹாராத் மூன்றாம் பகுதி பக்கம் 50, 51*)

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஓர் அறிவிப்பு ஆகும். அதன் கீழ் இப்போதும் 'ரிஷ்தா நாத்தா' என்ற திருமணத்துறை உள்ளது. உலகம் முழுவதும் உள்ளது. சிலர் தனிப்பட்ட முறையில் கூட ஆர்வம் கொண்டுள்ளனர். அவர்களிடம் இப்பணி ஜமாஅத்தான முறையில் தரப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் அருளால் வரன்கள் முடிவாகின்றன. ஆனால் சில பிரச்சனைகளும் உள்ளன. அல்லாஹ் அதனையும் களைவானாக. ஆனால் இதில் வெளியில் எங்களுக்கு சம்பந்தம் செய்ய அனுமதி வேண்டும் என்று கேட்பவர்களுக்கும் ஆறுதலான பதில் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் நம்மை சுயமாக காஃபிர் என்று கூறுவதில்லை அல்லது மார்க்கத் தீர்ப்பு தருவதில்லை. அவர்களுடன் உட்காருவதும் எழுவதும் அவர்களுக்கு ஆமாம் போடவும் செய்கிறார்கள். பயத்தினால் எதுவும் கூறாமல் இருக்கிறார்கள். அவர்களின் பள்ளிவாசல்களுக்கு செல்கிறார்கள். அவர்களின் பேச்சைக் கேட்கிறார்கள் எனில் அவர்களும்கூட அம்மக்களை சார்ந்தவர்களே. அவர்களுடனும் சம்பந்தம் செய்யக் கூடாது.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: ''பையன், இளம் பெண்களின் பெயர்களை அனுப்புங்கள்.'' இப்போது நமது திருமணத் துறை இருக்கிறது. நான் கூறியதுபோன்று எல்லா

இடத்திலும் உள்ளது. அவர்கள் இளம்பெண்களுக்கு சம்பந்தம் ஏற்பாடு செய்வதில்லை என்று அவர்களுக்கு எதிராக பொதுவாக ஒரு புகார் உள்ளது. இதில் உள்ள சிக்கல் என்னவெனில் பெற்றோர் பெண் பிள்ளைகளின் பெயரை அனுப்புகிறார்கள். பையன்களின் பெயரை அனுப்புவதில்லை. பையன்களின் பட்டியலும் இருந்தால்தான் வரன் தேடி தருவதில் எளிது ஏற்படும். பொதுவாக பெண்களின் எண்ணிக்கை பையன்களை விட அதிகம் உள்ளது. சரிதான். ஆனால் வித்தியாசம் அதிக அளவில் இவ்வளவுதான் **51–52** இளம்பெண்கள் இருந்தால் **48–49** பையன்கள் இருப்பர். ஆனால் ஜமாஅத்திற்கு வருகிற விபரங்களில் **7–8** பெண்களின் விபரங்கள் வந்தால் ஒரு பையனின் விபரம் வருகிறது. இவ்வாறு பிறகு வரன் கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. இருபுறமும் முழுமையான விபரங்கள் வந்தால் வரன் தேடி தருவது எளிதாக இருக்கும். பையன்களுக்கு சம்பந்தம் பார்ப்பதில் பெற்றோர் இருவரும், இன்னும் சொல்வதாயின் பெரும்பாலும் தாமே கூட முயற்சி செய்கிறார்கள். நெருங்கிய சொந்தங்களிலோ அல்லது அன்பர்களிலோ வரன் இருக்கும் என்றால் சரி! இல்லாதபட்சத்தில் பையன்களின் பெயர்களும் விபரங்களும் கூட ஜமாஅத்திற்கு கிடைக்கச் செய்யுங்கள். அப்போதுதான் இளம் பெண்களுக்கும் வரன் அமையும். அதன் மூலம் அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்து முடிவு செய்ய முடியும். எனவே பெற்றோர் தவிர பையன்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஒன்று ஜமாஅத்திற்குள் பெண்களை முடிக்க முயற்சி செய்யுங்கள். உறவினர்களிடம் சொந்தத்தில் கிடைக்காவிடில் ஜமாஅத் அமைப்பின் கீழ் முயற்சி செய்யுங்கள். இன்னும் சிலர் குடும்பங்கள்,

கோத்திரம், அழகு போன்ற பிரச்சனையில் உழல்கிறார்கள். ஓரளவுக்கு நான் முன்னரும் கூறினேன். பிறகும் மறுத்து விடுகிறார்கள். பிறகு இந்த விவகாரத்தில் உழன்று வருவதால் பெண்களுக்கு வரன் அமைவதில் சிக்கல் ஏற்படுகிறது. எனவே இந்த கோத்திரம் போன்ற விவகாரங்களை பார்ப்பதை விட்டுவிட வேண்டும்.

இது குறித்து ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "பல்வேறு கோத்திரங்கள் உள்ளன. அது எந்தக் கண்ணியத்திற்கும் உரியதல்ல. அறிமுகத்திற்காகவே அல்லாஹ் இந்த குடும்பங்கள் கோத்திரங்களை ஏற்படுத்தி –யுள்ளான். தற்காலத்தில் நான்கு தலைமுறைக்கு மேல் அசல் அடையாளம் கண்டுபிடிப்பது சிரமமாகி விட்டது. எனவே குடும்ப கோத்திர சச்சரவில் விழுவது இறையச்சம் உடையவரின் அடையாளம் அல்ல. என் பார்வையில் கோத்திரம் ஒரு நற்சான்று அல்ல. உண்மையான கண்ணியம், மகத்துவத்திற்கு காரணம் இறையச்சமே ஆகும் என்று அல்லாஹ் தீர்ப்பு வழங்கிய பிறகு இவ்விஷயங்களில் சிக்குவது கூடாது."

நாம் இறையச்சத்தில் நடந்தவாறு வரன் பேசி முடிக்க அல்லாஹ் வாய்ப்பு தருவானாக. இள வயதினருக்கு சம்பந்தம் பேசி முடிக்க வாய்ப்பு தருவானாக. திருக்குர்ஆனின் கட்டளைக்கு ஏற்ப அனாதைகள், விதவைகளுக்கு வரன் பேசித்தர ஜமாஅத் அமைப்புக்கும் மக்களுக்கும் சமூகத்திற்கும் கூட அல்லாஹ் வாய்ப்பு தருவானாக. அல்லாஹ், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற பெண் பிள்ளைகளின் பெற்றோர்களது துன்பங்களையும் அகற்றுவானாக. ஆமீன்.

✪❉✪❉✪❉✪

**திருமணங்களின் போது தேவையற்ற இடங்களில் செலவழிப்பதும், பகட்டும், தனது மேன்மையை வெளிப்படுத்துவதும், தனது செல்வத்தை வெளிப்படுத்திக் காட்டுவதும் கூடாது. சிலர் தற்போது தேவையை விட அதிகமாக இந்தச் சடங்குகளில் மூழ்க ஆரம்பித்துள்ளார்கள். இப்போது நான் வெளிப்படையாகக் கூறுகின்றேன். இந்த வீணான சடங்கு சம்பிரதாயங்களுக்குப் பின்னால் செல்லாதீர்கள். அவற்றை நிறுத்தி விடுங்கள்.**

[அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ∴புதூஹ் பள்ளிவாயிலில் 15.01.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை]

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالنُّوْرِ الَّذِيْٓ اَنْزَلْنَا ۗ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ

பொருள்: எனவே நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனது தூதரிடத்தும், நாம் இறக்கிய ஒளியி(ன், அதாவது குர்ஆனி)–னிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிபவனாவான். **(64:9)**

அல்லாஹ் தனது அடியார்களுக்கு செய்த பெருங் கருணையால் படைப்பினங்களுள் சிறந்த படைப்பாக மனிதனை ஆக்கியுள்ளான். அவனுக்கு இறைவன் சிந்தனைத்திறன் என்ற சிறப்புத்தன்மையை வழங்கி இருப்பதால் அவன் (மனிதன்) இறைவன் படைத்துள்ள மற்ற படைப்பினங்களைத் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவது மட்டுமின்றி அவற்றிலிருந்து சிறந்த பயனையும் பெறுகிறான்.

ஒவ்வொரு புதிய நாளிலும் புதிய புதிய கண்டுபிடிப்புகள் இத்திறமையின் காரணத்தால் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்–கின்றன. இன்றிலிருந்து பத்து வருடங்களுக்கு முன்பு

இன்றிருந்த முன்னேற்றம் இருந்ததில்லை. பத்து வருடங்களுக்கு முன்பு இருந்த முன்னேற்றம் இருபது வருடங்களுக்கு முன்பு இருந்ததில்லை.

அதுபோன்று பின்னால் செல்லச் செல்ல இன்றைய புதிய புதிய கண்டுபிடிப்புகளை வைத்து, நாம் இவற்றின் முக்கியத்துவத்தையும் மனித மூளையின் ஆற்றலையும் மதிப்பிடலாம். ஆனால் இந்த மனிதன் அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்தான் அவனது பிறப்பின் நோக்கமா?

ஒவ்வொரு காலத்தின் உலகியல் சார்ந்த மனிதர்களும் இதனைத்தான் தமது வாழ்வின் இலட்சியமாகக் கருதி வந்தனர். உலகியல் சார்ந்த முன்னேற்றம், உலக ஆடம்பரங்களில் மூழ்குதல், தம் செல்வத்தின் மூலம் தமக்குக் கீழிருப்பவர்கள் மீது மேன்மையை எடுத்துக் கூற வேண்டும் என்ற சிந்தனை, தமது செல்வத்தை தமது பௌதீக நிம்மதிக்குக் காரணமாக ஆக்குதல், தமது ஆற்றலால் அடுத்தவரை தமக்குக் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதையே வாழ்வின் இலட்சியமாகக் கருதி வந்தனர். செல்வம் இல்லாத உலகவாதிகளும், இக்கால இளைஞர்களும் கூட இக்காலத்தின் தொலைக்காட்சி, இணையதளம் போன்றவை தான் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பவை என்று கருதுகின்றனர். இதனால் பெரிதும் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர். இது மிகவும் தவறான சிந்தனையாகும். இந்தக் கற்பனை பல குழப்பவாதிகளையும் அநீதியிழைக்கக் கூடியவர் –களையும் உருவாக்கி விட்டது. இந்தச் சிந்தனையே உல்லாசத்தில் மூழ்கிக் கிடப்பவர்களை உருவாக்கி விட்டது. இந்தச் சிந்தனையே ஒவ்வொரு காலத்திலும் ஃபிர்அவ்னை உருவாக்கியது. நம்மிடம்

செல்வம், மகத்துவம் எல்லாம் இருக்கிறது என்ற பிரமையை உருவாக்கியது. ஆனால் இந்தச் சிந்தனையை, உலகங்களின் இறைவன் உலகைப் படைத்தவன் மிக ஆணித்தரமாக மறுத்துள்ளான்.

உங்கள் வாழ்வின் இலக்காக எவற்றை நீங்கள் கருதுகிறீர்களோ அவை உங்கள் வாழ்வின் இலக்கு அல்ல. இந்த பௌதீக பொருட்களிலிருந்து பயன் பெற்றவாறே உலகத்தை விட்டு விடை பெற்றுச் சென்று விடலாம் என்பதற்காக நீங்கள் படைக்கப்படவில்லை. மாறாக, இறைவன் கூறுகிறான்:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

“நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன்.” **(51:57)**

இது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“மனிதன் படைக்கப்பட்டதன் அசல் நோக்கம், அவன் தனது இறைவனைக் கண்டறிவதுதான். அவனுக்குக் கட்டுப்பட வேண்டும். அதனையே وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் **(51:57)** என்று கூறியுள்ளான்.

ஆனால் பரிதாபம் என்னவென்றால், உலகில் வாழ்கின்ற பலர் வாலிப வயதை அடைந்தும் கூட தமது கடமை மற்றும் தமது வாழ்வின் நோக்கத்தைப் புரியவில்லை. இறைவனை விட்டு விட்டு உலகத்தின் பக்கம் சாய்கின்றனர். உலகின் பொருள், கண்ணியம் இவற்றினால் பெரும் மன நிறைவுக்குள்ளாகி இருக்கின்றனர். இறைவனின் பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது. பலரின்

உள்ளத்தில் (இறைவனைப் பற்றிய சிந்தனை) அறவே இல்லை. உலகிலேயே மூழ்கி மாய்ந்து போகின்றனர். இறைவன் ஒருவன் இருக்கிறான் என்ற செய்தி கூட அவர்களுக்குத் தெரிவதில்லை.”

*(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 134 புதிய வெளியீடு)*

மனிதர்களுக்குத் தம் பிறப்பின் நோக்கத்தைப் புரிய வைக்கவும் அவனை எப்படி வணங்க வேண்டும்? என்று கற்றுக் கொடுக்கவும் அல்லாஹ் உலகில் நபிமார்களை அனுப்பி வந்தான்.

அவர்கள் தமது சமுதாயத்திற்கு வணக்க வழிபாடுகளின் நெறிமுறையையும் பிறப்பின் நோக்கத்தையும் கற்றுக் கொடுத்தனர். பிறகு மனிதன் ஒவ்வொரு தூதுச் செய்தியையும் புரிந்து கொள்வதற்குத் தகுதி பெற்றதும் அவனது மன ஆற்றல் மேலும் வளர்ச்சி அடைந்தது. இறைவணக்கங்களின் உயர் தகுதிகளைப் புரியத் தொடங்கினான். உலகியல் ரீதியாக தொலைநோக்குப் பார்வையும் நல்லொழுக்க மேன்மையும் பெறத் தொடங்கினான். சமூகத்தில் ஒருவருக்கொருவரின் தொடர்பும் விரிவடைந்தது. அப்போது முழுமையான மனிதராகிய காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை கடைசி ஷரீஅத்துடன் அல்லாஹ் அனுப்பினான். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையைப் பெற்று இவ்வாறு அறிவித்தார்கள்.

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

இன்று நான் உங்களுடைய நலனுக்காக, உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருள்களையும் கருணையையும் நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்துள்ளேன். (5:4)

இந்தத் திருக்குர்ஆன், எவர்களுக்காக மார்க்கம் முழுமையாக்கப்பட்டதோ அவர்களுக்கு அல்லாஹ்வுடைய நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியைக் கூறியுள்ளது. இறை வணக்கங்களின் உயர் தகுதியை அடைவதற்கான வழியைக் கூறியுள்ளது. சமூகத் தொடர்புகளைப் பராமரிக்கும் வழிமுறைகளையும் கற்றுக் கொடுத்துள்ளது. எதிரிகளுடன் நடந்து கொள்ளும் முறையையும் கற்றுக் கொடுத்துள்ளது. சமுதாயத்தின் பலவீனமான பிரிவினர்களுக்கு உரிமைகளை வழங்கும் முறையைக் கற்றுக் கொடுத்துள்ளது. பெண்களின் உரிமைகளை வழங்கும் முறையைக் கற்றுக் கொடுத்துள்ளது. வருங்காலத்தில் கண்டுபிடிக்கப்படும் புதிய கண்டுபிடிப்புகளில் இருந்து எப்படி பயன் அடைய வேண்டும் என்றும் கற்றுக் கொடுத்துள்ளது. வானங்கள், பூமியிலுள்ள கருவூலங்கள் தொடர்பாக மனிதனுடைய அறிவு, தொலைநோக்குப் பார்வை எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அதுவரை செல்வதற்கான வழியைக் கூறியுள்ளது. இன்றிலிருந்து 1400 ஆண்டுகள் முன்னர் வாழ்ந்த மனிதனால் புரிந்து கொள்ள முடியாத பல விஷயங்களை எடுத்துக் கூறியுள்ளது. அக்காலத்தில் அதனை மனிதனால் முற்றிலும் சிந்தித்துப் பார்க்க முடியாததாக இருந்தது. அது குறித்து இன்றும் மனிதன் ஆய்வு செய்து கொண்டுதான் இருக்கிறான். அதுமட்டுமல்ல; இன்றும் கூட வருங்காலத்தில் வரவிருப்பதைப் பற்றியும் கூட கூறியுள்ளது.

திருக்குர்ஆனில் கூறப்பட்ட இந்த அனைத்து விஷயங் –களையும் ஒரு சாதாரண நம்பிக்கை கொண்ட முஸ்லிமால் புரிய இயலாததாக இருந்தது. ஆனால் அனைத்து விஷயங்களையும்

அந்த முழுமையான மனிதராகிய காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் விளங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் அல்லாஹ்வின் ஒளியால் முழுமையாக ஒளியூட்டப்பட்டிருந்த ஒரு முழுமையான ஒளியாக இருந்தார்கள். சஹாபிகளிடம் அன்னார் அந்த சஹாபிகளின் தகுதிக்கேற்ப அந்த ஒளியையும் நிரப்பிக் கொடுத்தார்கள். இபாதத்தின் வழிமுறையையும் கற்றுத் தந்தார்கள். அதன் உயர் தகுதியைப் பெறுவதன் பக்கம் கவனமூட்டினார்கள். அவர்களுக்குத் தமது பிறப்பின் நோக்கத்தைப் புரிவதன் பாலும் கவனமூட்டினார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளியைப் பெற்ற நபித்தோழர்கள் தமது தகுதிக்கேற்ப அந்த ஒளியை மேலும் பரப்பவும் தொடங்கினார்கள். ஒரு விளக்கிலிருந்து இன்னொரு விளக்கு என வெளிச்சமூட்டிக் கொண்டே சென்றார்கள். சாதாரண மனிதர்களால் அக்காலத்தில் புரிய முடியாத பல விஷயங்களை அம்மக்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். முழுமையான வேதம் மூலம் கியாமத் வரை அந்த ஒளி வெளிச்சமூட்டிக் கொண்டே செல்லும். வருங்கால முஃமின்களும் அந்த அருளைக் காண்பர். ஓர் உலகியல் சிந்தனை உடைய மனிதன் அதே கண்ணோட்டத்துடன் மட்டும் பார்ப்பார். ஆனால் ஓர் உண்மையான முஃமின் தனது பிறப்பின் நோக்கத்தை அடைவதற்காக அதே கண்ணோட்டத்தில் பார்ப்பார். அல்லாஹ்வின் முன்னறிவிப்பிக்கேற்ப இன்றே இந்தப் பொருள்கள் உருவானவை என்று அறிவார்.

நம்பிக்கை கொண்டவரின் பார்வையில் இந்தக் கண்டுபிடிப்புகள் மற்றும் இந்த உலகப் பொருள்கள், உலகப் பலன்களுடன் மட்டும் தொடர்புடையவையாக இருக்காது. மாறாக,

அவர்கள் தமது பிறப்பின் நோக்கத்தைப் புரிந்தவர்களாக அந்த உண்மையான ஒளியிலிருந்து பயன் பெற முயற்சி செய்வார்கள். இவ்வாறு வழிகேட்டின் இருட்டில் தடுமாறிக் கொண்டிருந்த மக்கள் அந்த நபியின் ஒளியிலிருந்து பயன்பெற்றனர். இன்றிலிருந்து **1400** ஆண்டுகளுக்கு முன் அல்லாஹ்வுக்குப் பிரியமான நபி ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த ஒளியைக் கொண்டு வந்தார்கள்.

மேலும் ஒவ்வொரு களத்திலும் அக்கால மக்கள் உயர் தகுதியை அடைந்தனர். அது போன்று இப்போதிருந்து கியாமத் வரை அந்த நபியுடன் மற்றும் முழுமையான ஷரீஅத்துடன் தொடர்பு கொள்பவர் இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் வெளியேறிக் கொண்டே செல்வார். உலகிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் சொர்க்கங்களுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வார்.

அல்லாஹ் இதனைப் பற்றி அத்தலாக் அதிகாரத்தின் 12 –வது வசனத்தில் கூறுகிறான்:

رَّسُوْلًا يَّتْلُوْا عَلَيْكُمْ اٰيٰتِ اللّٰهِ مُبَيِّنٰتٍ لِّيُخْرِجَ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
مِنَ الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ ؕ وَمَنْ يُّؤْمِنْۢ بِاللّٰهِ وَيَعْمَلْ صَالِحًا يُّدْخِلْهُ جَنّٰتٍ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَاۤ اَبَدًا ؕ قَدْ اَحْسَنَ اللّٰهُ لَهٗ رِزْقًا

அத்தூதர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்பவர்களை (எல்லா வகையான) இருள்களிலிருந்து(ம்) ஒளியின்பால் கொண்டு வருவதற்காக, அல்லாஹ்வின் தெளிவான வசனங்களை உங்களுக்கு ஓதிக் காட்டுகின்றார். மேலும், அல்லாஹ்விடத்து நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவரை, அவன் தோட்டங்களில் நுழையச் செய்வான். அவற்றிற்கிடையே

ஆறுகள் ஓடுகின்றன. அவர்கள் அத்தோட்டங்களில் என்றென்றும் வாழ்ந்து வருவார்கள். நிச்சயமாக அல்லாஹ் அவருக்காக மிகச் சிறந்த உணவை வழங்கியுள்ளான். **(65:12)**

ஆகவே அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெற வேண்டும் எனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்மாதிரி மற்றும் அவர்களுக்கு இறங்கிய போதனை ஆகியவற்றைப் பேண வேண்டும். அந்தப் போதனையின்படி நடக்க முயற்சி செய்வது மட்டும் தான் ஒருவரை இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வரும். மேலும் அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெற்றுத் தருகிறது. அந்த ஒளியிலிருந்து பங்கு பெறுவதற்கு ஈமானும் நற்செயல்களும் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை அல்லாஹ் வைத்துள்ளான். வெறுமனே நம்பிக்கை கொள்வது மட்டும் போதுமானதன்று. ஒரு முஃமினுக்கு நற்செயல்கள் செய்வதன் பக்கம் அதிக கவனம் தேவை. மேலும் அவர் கட்டுப்படாமை மற்றும் தீமைகளிலிருந்து விலக வேண்டும்.

நான் முதலில் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ்வின் மீது ஈமான், அவனது ரஸூலின் மீது ஈமான், திருக்குர்ஆனின் மீது ஈமான் இவைதான் அந்த ஒளியில் உங்களை பங்குதாரர் ஆக்கும். சொர்க்கத்தின் வாரிசுதாரர் ஆக்கும். அல்லாஹ் மனிதனது ஒவ்வொரு செயலையும் நன்கு அறிந்தவனாக இருக்கிறான். எந்த செயலை இறை திருப்தியைப் பெறுவதற்காக மனிதன் செய்துள்ளான் என்பதை அவன் நன்கு அறிந்துள்ளான். ரஸூலின் முன்மாதிரியின்படி செயல்பட எந்த அளவு மனிதன் முயற்சி செய்துள்ளான் என்பதனை நன்கு அறிந்துள்ளான். ஈமான் கொண்டிருப்பதாக வாதம் செய்வது

வெறும் நாவளவிலா அல்லது உள்ளத்திலிருந்து கூறப்பட்டதா என்று நன்கு அறிகிறான். எனவே, அல்லாஹ் மனிதனின் மீது பேருபகாரம் செய்தவனாக ஒரு நபியை அனுப்பினான். அவரது போதனையின் படி அமல் செய்வதில்தான் மனிதனது உலக மற்றும் மறுமையின் நிலைப்புத்தன்மை உள்ளது. முஃமினாக இருப்பதாக வாதம் செய்பவருக்கு இந்தப் போதனையைக் கடைபிடித்து நடப்பது கடமையாகிறது. அது முழுமையானதும் முழுமையாக்கக் கூடியதுமான போதனையாகும்.

பிறகு அல்லாஹ்வுடைய இந்தத் தொடர் பேருபகாரத்தைப் பாருங்கள்! وَّاٰخَرِيْنَ مِنْهُمْ அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கு இடையிலும் **(62:4)** என்று சொல்லி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆனின் ஒளியூற்று தொடரக் கூடியது என்று விளக்கினான்.

இருளின் காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒளியிலிருந்து மிக அதிகமாக பங்கு பெறக் கூடியவராகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மை ஊழியராகிய இமாம், மஸீஹ் மற்றும் மஹ்தி வர வேண்டிய –திருந்தது. அவர் மூலம் பிறகு மீண்டும் இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் வழிகாட்டல் உருவாகும்.

வரக்கூடிய மஸீஹ் மவ்வூது, மஹ்தி மவ்வூது இந்த உம்மத்தையும் மற்ற சமுதாயத்தையும் தவறான கொள்கைகள் மற்றும் செயல்களின் இருளிலிருந்து ஒளியின் பக்கம் வெளியேற்ற வேண்டியிருந்தது. எவர் அவருடன் இணைந்திருப்பாரோ, அவரை ஏற்றுக் கொள்வாரோ அவருடன் உண்மையான தொடர்பு வைப்பாரோ அவர் உலகின் வீணானவற்றில் இருந்து தப்பித்து

அவருடன் செய்த ஒப்பந்தத்தைப் பேணுபவராக இருப்பார். பிறகு அல்லாஹ்வுடைய அருள்களை ஈர்த்தவாறு சுவர்க்கத்தின் நற்செய்தியைக் கேட்பார்.

ஓர் அஹ்மதிக்கு இதுகேட்டு ஆறுதல் ஏற்படுகிற அதே வேளையில் ஒரு கவலையும் உள்ளது. தம்மை ஆய்வு செய்ய வேண்டிய தேவையும் உள்ளது. அந்த ஒளியிலிருந்து பங்கு பெறுவதற்கு, يُّؤْمِنْ بِاللّٰهِ وَيَعْمَلْ صَالِحًا அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டு நற்செயல்கள் செய்வார் என்ற நிபந்தனையையும் (அல்லாஹ்) வைத்துள்ளான். எனவே எப்போதும் கவனத்தில் கொள்ளத்தக்க விஷயம் என்னவென்றால், எந்த அமல் ஸாலிஹானது? எந்த அமல் ஸாலிஹ் அல்லாதது? என்பதாகும்.

சில சின்னச்சின்ன விஷயங்கள் வெளிப்படையாகச் சின்னதாகத் தென்படுகின்றன. உதாரணமாக, மகிழ்ச்சிகள். மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்குரிய வரம்புகள் என்ன? துக்கத்தைக் கடைபிடிப்பதற்கு வரம்புகள் என்ன? மகிழ்ச்சியும் துக்கமும் மனிதனுடன் பிணைக்கப்பட்டுள்ளன. சில வரம்புக்கு உட்பட்டவை. சில நிபந்தனைக்கு உட்பட்டவை.

இன்று முஸ்லிம்களைப் பாருங்கள். காலத்தின் தாக்கத்திற்குள்ளாகி மகிழ்ச்சியின் வேளைகளில் பல்வேறு பித்அத்துகளையும் வீணான காரியங்களையும் செய்கின்றனர். அதேபோன்று துக்கங்களின் வேளையிலும் விதவிதமான பித்அத்துகளைச் செய்து விடுகின்றனர். சடங்குகளைச் செய்கின்றனர். ஆனால் ஓர் அஹ்மதி இந்த விஷயத்தைச் சிந்திப்பது அவசியமாகும். தாம் செய்கின்ற ஒவ்வொரு பணியிலும் ஏதாவது ஒரு வகையில் பயன் ஏற்பட வேண்டும். ஒவ்வொரு

செயலையும் அல்லாஹ் மற்றும் ரஸூலினால் உருவாக்கப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டிருக்குமாறு செய்வது அவசியமாகும்.

நான் மகிழ்ச்சி, துக்கம் பற்றி குறிப்பிட்டேன். மகிழ்ச்சிகளுள் பெரும் மகிழ்ச்சியாக திருமண நிகழ்ச்சி கருதப்படுகிறது. இது கடமையாகும். சில சஹாபிகள் இறை வணக்கத்திற்காக தாம் திருமணம் செய்யாமல் இருக்க விரும்பியபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனைத் தீமை எனக் கண்டித்தார்கள். எனது சுன்னத்தின் படி அமல் செய்வதே நற்செயலாகும். நான் திருமணங்களும் செய்துள்ளேன். நோன்புகளும் நோற்கிறேன். இபாதத்துகளும் செய்கின்றேன் என்று கூறினார்கள். *(புகாரி கிதாபுன் நிகாஹ்)*

அவர்களின் இபாதத்தின் தகுதி நமது கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும்.

எனவே, ஒரு முஸ்லிமுக்கு எந்தத் தடையும் இல்லை எனில் அவர் கண்டிப்பாக திருமணம் செய்ய வேண்டும். இது கடமையாகும். ஆனால் இவற்றில் சில சடங்குகள், குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் இந்திய சுற்றுச் சூழலில் மக்களிடையே ஊடுருவி விட்டன. அந்தச் சடங்குகளுக்கும் இஸ்லாத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சில பகுதிகளில் இந்தச் சடங்குகள் எந்த அளவுக்கு தாம் தூம் என்று கொண்டாடப்படுகின்றன என்றால், இது திருமணத்தின் கடமைகளுள் ஒன்று என்று கருதப்படும் அளவுக்கு இந்தச் சடங்குகள் இல்லாமல் திருமணம் நடக்கவே முடியாது என்ற நிலை உருவாகி விட்டது.

மெஹந்தி என்ற ஒரு சடங்கு (மருதாணி வைக்கும் சம்பவம்) உள்ளது. இதற்கும் திருமணத்தைப் போன்று முக்கியத்துவம் தரப்படுகிறது. இதற்காக அழைப்பிதழ்கள் அச்சிடப்படுகின்றன.

மேடைகள் அமைக்கப்பட்டு பல நாள்களுக்கு விருந்து உபசரிப்பு நடத்தி இது கொண்டாடப்படுகின்றது. திருமணத்திற்கு முன்பிருந்தே ஆரம்பமாகி விடுகின்றன. சில இடங்களில் பல வாரங்கள் முன்பே தொடங்கி விடுகின்றது. ஒவ்வொரு நாளும் புது மேடை அலங்கரிக்கப்படுகிறது. பிறகு இன்று எவ்வளவு விருந்து சமைக்கப்பட்டது? என்று பேசப்படுகிறது. வசதி இல்லாதவர்களையும் கூட இந்த சடங்குகள் தமது பிடியில் எடுத்துக் கொண்டு விட்டன. இதனால் வசதி இல்லாதவர்கள் கடன் சுமைக்கு உள்ளாகின்றனர். அஹ்மதி அல்லாதவர்கள் தான் இதனை செய்து வந்தனர். ஆனால் இப்போது சில அஹ்மதி வீடுகளிலும் கூட இந்த வீணான சடங்குகள் நடைபெறுகின்றன. சில அஹ்மதி குடும்பங்கள் மிகப் பெரிதாக செய்கின்றனர். ஆனால் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டவர்கள் இந்த சடங்குகளிலிருந்து விலகி இருக்க வேண்டும். ஆனால் சமூகத்தின் பின்னால் சென்றவர்களாக இந்தச் சடங்குகளில் மூழ்கி விடுகின்றனர்.

சில மாதங்கள் முன்பு இந்த சடங்குகள் சம்பந்தமாக கவனமூட்டினேன். மருதாணி சடங்குக்காக பெரும் செலவு செய்து விருந்து வைக்கப்படுகின்றது. அதனை நாம் நிறுத்த வேண்டும் என்று கூறினேன்.

இங்கு இலண்டனில் ஓர் அஹ்மதி வீட்டில் மருதாணி சடங்குக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனது குத்பாவைக் கேட்டு விட்டு அவர் அவ்விருந்தை ரத்து செய்து விட்டார். மனப்பெண்ணின் சில தோழிகளை மட்டும் அழைத்து விருந்தளித்தார். சமைக்கப்பட்ட பெரிய விருந்தை அன்றைய தினம் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் நடைபெற்ற ஒரு

நிகழ்ச்சிக்காகக் கொடுத்து விட்டார். இதுவே ஓர் அஹ்மதியின் செயலாக இருக்க வேண்டும். கவனமூட்டப்பட்டவுடனே நடைமுறைப்படுத்துகிறார். அதற்குப் பிறகு மன்னிப்புக் கடிதமும் எழுதுகிறார். ஆனால், எனக்கு சில புகார்கள் பாகிஸ்தானிலும் ரப்வாவிலும் இருந்து கிடைத்துள்ளன. சிலர் அளவுக்கு அதிகமாக இந்த சடங்குகளில் மூழ்கியுள்ளனர். ரப்வா சிறிய ஊர் என்பதால் எந்த விஷயமும் உடனே வெளியே தெரிந்து விடுகிறது. எனவே நான் பகிரங்கமாகவே கூறுகிறேன். இந்த வீணான சடங்குகளுக்குப் பின்னால் போகாதீர்கள். இதனை நிறுத்துங்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்:***

“திருமணத்திற்கு நூற்றுக்கணக்கான ரூபாய்களை வீணாகச் செலவழிக்கும் ஒரு தீய வழக்கமும் நம்மிடையே நிலவுகிறது.” *(மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 70)*

அக்காலத்தில் – இன்றிலிருந்து 100 ஆண்டுகளுக்கு முன் நூற்றுக்கணக்கில் செலவழிப்பதே பெரும் செலவாகும்.

ஆனால் இன்று நூறு என்ன? இலட்சங்களில் செலவு செய்யப்படுகிறது. தகுதிக்கு மேல் செலவு செய்யப்படுகின்றது.

‘பட்டாசுகள் வெடிப்பதும் ஹராம்’ என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

*(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 49 புதிய பதிப்பு)*

திருமணத்தின்போது பட்டாசுகள் வெடிக்கப்படுகின்றன. இப்போது மக்கள் தமது வீடுகளில் திருமணத்தின்போது விளக்கு அலங்காரம் செய்கின்றனர். மேலும் தேவைக்கு அதிகமாக செலவு செய்கின்றனர்.

ஒருபுறம் பாகிஸ்தானில் ஒவ்வொரு நாளும் மின்சாரப் பற்றாக்குறை நிலவுவதாக செய்தி வருகிறது. பல மணி நேரம் மின் இணைப்பு துண்டிக்கப்படுகின்றது. விலைவாசியும் இடுப்பை முறிக்கின்றது. இன்னொருபுறம் சில வீடுகள் வீண் விரயம் செய்யும் விதத்தில் நாட்டுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவது மட்டுமின்றி பாவத்திற்கும் உள்ளாகின்றனர்.

எனவே, பொதுவாக பாகிஸ்தானின் அஹ்மதிகள் இந்த விஷயத்தைக் கவனத்தில் கொள்ளுங்கள். வீண் செலவு செய்வதிலிருந்து விலகுங்கள். குறிப்பாக ரப்வாவில் திருமண வைபவங்களில் தேவைக்கு அதிகமாக, காட்டுவதற்காகவும் பெருமைக்காகவும் பணத்தைச் செலவு செய்யக் கூடாது. இந்த விஷயத்தைக் கண்காணிப்பது ரப்வா சதர் உமூமியின் பொறுப்பாகும்.

அல்லாஹ்வின் சிறப்பான அருளால் ஜமாஅத், துக்க வேளையில் செய்யப்படும் பல தீய சடங்குகளிலிருந்து தப்பியுள்ளது. ஏழாவது நாள், பத்தாவது நாள், நாற்பதாவது நாள் போன்ற சடங்குகள் எல்லாம் (மரணத்தை ஒட்டி) செய்யப்படுவதில்லை. இந்த சடங்குகள் பெரும்பாலும் வீட்டினருக்கு சுமையாகவே இருக்கின்றன. ஆனால் சமுதாயத்தின் தாக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களாக மற்ற வகை சடங்குகளில் வீழ்ந்து விட சாத்தியம் உண்டு.

எனவே அஹ்மதிகள் தமது தகுதியைப் புரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டி மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணையும் நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். இப்போது சரியான இஸ்லாமிய போதனையின்படி செயல்படுவது கடமையாகும். திருமணத்திற்கான இஸ்லாமிய போதனைகளில் எவையெல்லாம் கடமையாக உள்ளனவோ

அவையே திருமணத்தில் அவசியம் பேண வேண்டிய கடமைகளாகும். அதற்காக ஒரு Function நடத்தலாம். அவரிடம் சக்தி இருக்கும் என்றால் உணவுக்கான ஏற்பாடும் செய்யலாம். அதுவும் கூட வரக்கூடிய ஒவ்வொருவருக்கும் விருந்து கொடுத்தாக வேண்டும் என்பது கூட கண்டிப்பு இல்லை. தூரத்திலிருந்து வருபவர்களுக்கு மட்டும் கூட விருந்தளிக்கலாம். நாட்டின் சட்டம் தடுக்கும் என்றால் விருந்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அல்லது திருமணத்திற்கு வந்த உறவினர்கள், வீட்டிலுள்ளவர்கள் மட்டும் குறுகிய எண்ணிக்கையில் விருந்து உண்டு கொள்ளலாம். ஏனெனில் பாகிஸ்தானில் ஒரு நேரத்தில் இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த சட்டம் எப்படி உள்ளது என்று எனக்கு தெரியாது. ஆனால் ஓரளவுக்கு இப்போதும் கூட கட்டுப்பாடு உள்ளது.

அடுத்து வலீமா (விருந்து) உள்ளது. இது தமது நெருக்கத்தில் உள்ளவர்களை அழைத்து ஒரு விருந்து வைக்க வேண்டும் என்பது அசல் கட்டளையாகும். இஸ்லாத்தில் கூறப்பட்ட திருமண விருந்து இது ஒன்று மட்டுமே ஆகும். ஆனால் இதுவும் கூட பெரிய அளவில் நடத்த வேண்டும் என்று கூறப்படவில்லை. ஒருவர் தமது வசதிவாய்ப்பிற்கேற்ப மக்களை அழைத்து விருந்தளிக்கலாம்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இறைவன் நமது பிறப்பின் நோக்கத்தைக் கூறிவிட்டான். ஒவ்வொரு நற்செயலும் இறை திருப்தி பெறுவதற்காகவே செய்யப்படுகின்றது. அவ்வாறு செய்யப்படும்போது அதுவும் ஓர் இபாதத் ஆகி விடுகிறது. இதனைக் கவனத்தில் கொள்ளும் போதுதான், அதில்தான் நமது

நிலைப்புத்தன்மை உள்ளது. அதன் பிறகு நாம் இந்தச் சடங்குகளிலிருந்தும் விலகி விடலாம். பித்அத்துகளிலிருந்தும் விலகி விடலாம். வீண் செலவுகளைத் தவிர்த்து விடலாம். வீணானவற்றிலிருந்து விலகி விடலாம். அநீதியிலிருந்தும் விலகி விடலாம். இந்த அநீதி ஒரு வகையில் வெளிப்படையான அநீதியாகும். அதனை ஆற்றலுள்ள மக்கள் செய்கின்றனர். இந்தச் சடங்கு சம்பிரதாயங்கள் ஒரு மனிதன் தன்னையும் அறியாமலேயே தனது உயிருக்கு இழைக்கும் அநீதியாகக் கூட சில வேளைகளில் அமைந்து விடுகின்றன. பிறகு இதுவும் திருமணக் கடமைகளில் ஒன்று என ஏழைகள் நினைக்கும் வகையில் சமுதாயத்தில் இதனை நடைமுறைப்படுத்தி அநீதி இழைக்கின்றனர். இதுவும் திருமண கடமைகளுள் ஒன்று என்று கருதுகின்றனர்.

எந்த சமூகத்தில் இந்த சடங்கு சம்பிரதாயங்கள், பித்அத்துகள், வீணானவைகள் இருக்குமோ அந்த சமுதாயம் அடுத்தவரின் உரிமையைப் பறிக்கத் தொடங்குகிறது. பிறகு நான் கூறியதுபோன்று ஒரு சமுதாயம் மற்ற சமுதாயத்தின் மீது அநீதியிழைக்கத் தொடங்குகிறது. ஆனால் நாம் இவற்றிலிருந்து விலகி விட்டால் பிறர் உரிமையைப் பறித்தலில் இருந்தும் தப்பிப்போம். அநீதியிழைத்தலில் இருந்தும் தப்பித்துக் கொள்வோம். மேலும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்களாகவும் இருப்போம். இன்று அஹ்மதியை விட அதிகமாக வேறு யார் அடுத்தவரின் உரிமையை நிலைநாட்டுவதற்காகவும், இறை திருப்தியின் சூழல் நிலைபெறவும் குரல் கொடுக்கிறார்கள்? இன்று அஹ்மதியைத் தவிர வேறு யார் சடங்குகளைப் பின்பற்றுவதை விட்டும் மன உணர்வுகளைப் பின்பற்றுவதை விட்டும் விலகுவதாக உறுதி எடுத்துள்ளார்கள்?

திருக்குர்ஆனின் ஆட்சியை முற்றிலும் என் தலை தாங்கி ஏற்பேன் என்று அஹ்மதிகளைத் தவிர வேறு யார் உறுதி எடுத்துள்ளார்கள்?

அல்லாஹ்வின் கூற்றையும் ரஸூலின் கூற்றையும் தனது அனைத்து வழியிலும் ஒவ்வொரு செயலிலும் அமல்படுத்துவதாக அஹ்மதியைத் தவிர வேறு யார் உறுதி எடுத்துள்ளார்கள்?

அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலிடமிருந்தும் திருக்குர்ஆனின் ஒளியிலிருந்தும் அருளைப் பெறுவதற்காக அஹ்மதிகளே காலத்தின் இமாமின் கையில் ஓர் உறுதிமொழி எடுத்துள்ளனர். அந்த பைஅத் நிபந்தனைகளில் இதுவும் அடங்கும். அந்த உறுதிமொழியைக் கவனத்தில் வைத்து நடப்பது அவசியமாகும். இந்த உறுதிமொழியைப் பின்பற்றுவதன் மூலம் நம்மை நாம் பிணைத்துக் கொள்ளவில்லை. மாறாக ஷய்த்தானின் கட்டுப்பாட்டில் இருந்து விடுதலை பெறுகின்றோம். மாறாக, தனது பாதுகாப்பிற்கான ஏற்பாடு செய்கின்றோம். இறைவன் மற்றும் அவனது தூதரின் கூற்றின்படி செயல்படுவதால் நமது புரியும் திறன், தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றைக் கூர்மை ஆக்குகின்றோம். இறைவன் மற்றும் அவனது ரஸூலின் கூற்றின்படி செயல்பட்டு தமது கண்ணியத்தைப் பாதுகாக்கின்றனர். தமது வெட்கத்தின் தகுதியை உயர்த்துகின்றனர். பொறுமை, தன்னிறைவு என்ற சக்தியை தம்மிடத்தில் உருவாக்க முயற்சி செய்கின்றனர். தமக்குள் தூய்மை மற்றும் தக்வாவை உருவாக்க முயற்சி செய்கின்றனர். தமது ஈமானில் உறுதியை உருவாக்குகின்றனர். தமது அமானிதத்தின் உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்கின்றனர். அல்லாஹ்வுடைய அச்சம்,

இறை அன்பு மற்றும் இறைவன் பக்கம் தூய்மையாகக் குனிவதன் தரத்தைப் பெற, இதன் உயர் தரத்திற்குச் சென்றவாறு பிறப்பின் நோக்கத்தை அடைய முயற்சி செய்கின்றனர். ஆகவே இருள்களிலிருந்து வெளியேறி ஒளியின் பக்கம் வருவதற்கு ஒளியைப் பெறுவதற்குக் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்ததன் சரியான உரிமையை நிறைவேற்றுவதற்கு உலகவாதிகளின் விஷயங்களை விட்டு விட வேண்டும். தமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தம்மைத்தாமே உயரிய நல்லொழுக்கத்தின் பக்கம் கொண்டு செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

வெட்கத்தின் தரம் உயர வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். வெட்கம் என்பது ஈமானின் ஒரு பகுதியாகும். நான் ஆரம்பத்தில் கூறியதுபோன்று உலகியல் கண்டுபிடிப்புகளான தொலைக்காட்சி, இணையதளம் போன்றவை வெட்கத்திற்கான தரத்தின் இலக்கணத்தையே மாற்றி விட்டன. பகிரங்கமான வெட்கக்கேட்டைக் காட்டி விட்டு இது வெட்கக்கேடல்ல என்று கூறுகின்றார்கள். ஓர் அஹ்மதி தொலைக்காட்சியிலும் இணையதளத்திலும் பார்ப்பதை வெட்கத்தின் படித்தரமாகக் கொள்ள வேண்டாம். அது வெட்கம் அல்ல. அது மனயிச்சையின் பிடியாகும். பர்தாவை பேணாததன் மூலம் சில நல்ல அஹ்மதி குடும்பத்தினர் கூட வெட்கத்தின் தரத்தை மாற்றி வைத்துள்ளனர். கால முன்னேற்றத்தின் பெயரால் சில காரியங்கள் செய்யப்படுகின்றன; சில செயல்கள் செய்யப்படுகின்றன. அது கணவன் மனைவியாகவே இருப்பினும் அவற்றையெல்லாம் ஒரு நல்ல அஹ்மதி பார்க்கவே முடியாது. சில செயல்களை மற்றவர்கள்

முன் செய்வது அனுமதியற்றது மட்டுமின்றி பாவமும் ஆகும். அஹ்மதி வீட்டினர் இந்த தீய செயல்களிலிருந்து தம்மை தூய்மையாக்கிக் கொள்ளவில்லை எனில் பிறகு எந்த உடன்படிக்கையின் புதுப்பித்தலை அவர்கள் இக்காலத்தின் இமாமின் கையில் செய்தனரோ அந்த உடன்படிக்கையையும் பேணவில்லை. மேலும் தமது ஈமானையும் வீணாக்கி விட்டனர்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்: اَلْحَيَاءُ شُعْبَةٌ مِّنَ الْاِيْمَانِ 'வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும்.' *(முஸ்லிம் கிதாபுல் ஈமான் ஹதீஸ் எண் 59)*

எனவே இதனை அனைத்து அஹ்மதி இளைஞர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். இக்காலத்திலுள்ள தீமைகளை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பார்த்து அதன் வலையில் சிக்கி விட வேண்டாம். இல்லையென்றால் ஈமானையும் கூட நழுவவிட்டு விடுவார்கள். இந்தத் தொடர்ச்சியான தீமையின் தாக்கத்தின் விளைவால் அவர்களிடம் வெளிப்படும் சில செயல்களால் ஜமாஅத்தை விட்டு வெளியேற்றும் தண்டனை கொடுக்க வேண்டி வருகிறது. எனது ஒவ்வொரு பணியும் இறை திருப்தியைப் பெறுவதற்காகவே நான் செய்கிறேன் என்ற எண்ணம் வர வேண்டும்.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "வெட்கக்கேடான காரியங்கள், அதனைச் செய்பவரை மோசமான அசிங்கமான மனிதனாக்கி விடுகிறது. வெட்கம், வெட்கம் உள்ள அனைவருக்கும் அழகான வாழ்க்கையை வழங்குகிறது. அழகிய தோற்றத்தை வழங்குகிறது." *(திர்மிதி - கிதாபுல் பர்ரி வஸ்ஸிலா பாபு மா ஜாஅ ஃபில் ஃபுஹ்ஷி வத்தஃபஹ்ஹுஷ் ஹதீஸ் எண்.1974)*

இந்தத் தோற்றம் தான் மனிதனுக்குள் நற்செயல் செய்வதற்கு தூண்டுதல் ஏற்படுத்துகிறது.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வைப் பற்றிய வெட்கம் உள்ளத்தில் வேண்டும். அதுவும் வெட்கப்பட வேண்டிய அளவுக்கு அவனிடம் வெட்கப்பட வேண்டும்." இறைவனுக்கு நன்றி. அவன் நமக்கு அவ்வெட்கத்தைத் தந்துள்ளான் என்று நபித்தோழர்கள் கூறினார்கள். உடனே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், "அவ்வாறு இல்லை. மாறாக, எந்த மனிதருக்கு வெட்கம் இருக்குமோ அவரது தலை மற்றும் அதனுள் ஒன்றிணைந்துள்ள சிந்தனைகளைப் பாதுகாக்க வேண்டும். (தமது சிந்தனையில் வரும் எண்ணங்களைப் பாதுகாருங்கள். இதுவே வெட்கமாகும்.) வயிறு மற்றும் அதில் நிரப்பப்படும் உணவு அதனையும் பாதுகாக்க வேண்டும். மரணம் மற்றும் சோதனையை நினைவில் வைக்க வேண்டும். ஒருவர் மறுவுலக வாழ்க்கையைக் கவனிக்கும்போது அவர் உலக அலங்காரங்களை விட்டு விடுகிறார். எவர் இத்தகைய வாழ்க்கை வாழ்வாரோ அவரே உண்மையில் இறைவனின் வெட்கத்தை மேற்கொண்டவர் ஆவார் என்று கூறினார்கள்." *(திர்மிதி - கிதாபு ஸிஃபதில் கியாமத்தி வர் ரகாயிகி வல் வரஃ, பாடம் 24/89 ஹதீஸ் எண். 2458)*

இது நபி (ஸல்) அவர்களின் கூற்றாகும்.

எனவே, சிந்தனையில் வரும் அனைத்து எண்ணமும் இறையச்சத்தை உடையதாக இருக்க வேண்டும். ஏதேனும் தீய எண்ணம் வந்தால் உடனே அதனை உள்ளத்தில் இருந்து களைந்துவிட வேண்டும். இஸ்திக்ஃபார் மூலம் அதனை உதறித் தள்ளி விட வேண்டும். எண்ணங்கள் தூய்மையாக இருந்தால்

செயல்களும் தூய்மையாக இருக்கும். வீணானவை அம்மனிதனிடம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அதுபோன்று மனிதன் தனது வாழ்வாதாரத்தையும் ஹலாலான முறையில் சம்பாதிக்க வேண்டும். எனவே முயற்சி செய்து சம்பாதியுங்கள். பிறரது சம்பாத்தியத்தில் பார்வையைச் செலுத்தி அதனைப் பிடுங்க முயற்சி செய்யாதீர்கள். அல்லது தவறான வழியில் சம்பாதிக்க முயற்சி செய்யாதீர்கள்.

பாகிஸ்தான் போன்ற நாடுகளில் லஞ்சம் மிகவும் சாதாரணமானது. ஆனால், இவ்வனைத்தும் ஹலாலான வருமானம் அல்ல. எனவேதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வயிற்றை எதனைக் கொண்டு நிரப்புகிறோமா அதனையும் பாதுகாக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட வருமானம் மூலம் உங்கள் வயிற்றையும் உங்களது மனைவி மக்களின் வயிற்றையும் நிரப்ப வேண்டும். அவர்களே அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீது உண்மையான ஈமான் உள்ளவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வை அடைவதற்காக ஒரு துஆ செய்தார்கள்: “வல்லமைமிக்க என் இறைவனே! எனது அன்பிற்குரிய வழிகாட்டியே! உண்மையாளர்களும் தூயவர்களும் பெற்ற வழியை எனக்குக் காட்டுவாயாக! மன இச்சைகள் மட்டுமே நோக்கமாக இருக்கும் வழிகளிலிருந்தும் வஞ்சகம், காழ்ப்புணர்ச்சி, உலகத்தின் மீது பேராசை போன்றவற்றில் இருந்தும் பாதுகாப்பாயாக!” *(பைகாமே ஸுல்ஹ். ருஹானீ கஸாயின் தொகுதி 23, ரப்வா வெளியீடு)*

எனவே நமது உறுதிமொழியைப் பேணியவர்களாக பைஅத்தின் தத்துவத்தை உணர்ந்தவாறு உண்மையாகவே

ஈமான் கொண்டவர்களில் இணைவோமாக. எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் ஒரு நபியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவர் நமக்கு சரியான வழியைக் காட்டியுள்ளார். நன்மை தீமையின் வித்தியாசத்தைப் புரிய வைத்தார். இதன் பிறகும் நாம் உலகியல் காரியங்களில் மூழ்கி, சடங்கு சம்பிரதாயங்களில் மூழ்கி வீணான சடங்குகள் என்ற சங்கிலியை நமது கழுத்தில் போட்டுக் கொள்வோம் எனில் நம்மால் இறைவணக்கத்தின் உரிமையையும் நிறைவேற்ற முடியாது. ஒளியிலிருந்து பங்கு பெறவும் முடியாது.

***திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:***

يَأْمُرُهُمْ بِالْمَعْرُوْفِ وَيَنْهٰهُمْ عَنِ الْمُنْكَرِ وَيُحِلُّ لَهُمُ الطَّيِّبٰتِ

وَيُحَرِّمُ عَلَيْهِمُ الْخَبٰٓئِثَ وَيَضَعُ عَنْهُمْ اِصْرَهُمْ وَالْاَغْلٰلَ الَّتِىْ كَانَتْ عَلَيْهِمْ

இத்தூதரைப் பின்பற்றுவோருக்கு நன்மை செய்யுமாறு அவர் கட்டளையிடவும், தீமையிலிருந்து அவர்களைத் தடுக்கவும் செய்கின்றார். மேலும், தூய்மையானதை அவர்களுக்கு அனுமதிக்கவும், அசுத்தமானதை அவர்களுக்கு விலக்கவும் செய்கின்றார். மேலும், அவர்களின் (மேலிருந்த) சுமையையும், அவர்களின் கழுத்துகளில் போடப்பட்டிருந்த விலங்குகளையும் அவர்களை விட்டு அவர் அகற்றுகின்றார். **(7:158)**

அதாவது, முன்னுள்ள சமுதாயங்களின் தோள்களில் கிடந்த சுமைகளை நம்மிடமிருந்து இறக்குகின்றார். அவர்கள் தங்களது மார்க்கத்தை மறந்து விட்டு தங்களால் உருவாக்கப்பட்ட சடங்கு சம்பிரதாயங்களில் மூழ்கி விட்டனர்.

கழுத்துகளில் போடப்பட்டுள்ள விலங்குகளை அவர் அகற்றுகிறார். எந்த விலங்குகள் முன்னுள்ள சமுதாயங்களின் மீது போடப்பட்டிருந்தனவோ முந்தைய சந்ததிகளில் போடப்பட்டு இருந்தனவோ, எவற்றைத் தமது மார்க்கத்தை மறந்து சடங்கு சம்பிரதாயங்களில் விழுந்து யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் கழுத்துகளில் போட்டிருந்தனரோ, அதே விஷயங்கள் இப்போது சில முஸ்லிம்களிடத்தும் உருவாகுகின்றன. நம்மிடமும் உருவாகி விட்டால் பிறகு நாம் எவ்வாறு இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தியை எடுத்து வைக்கும் பொறுப்பை எடுத்திருக்கிறோம் என்ற வாதத்தைச் செய்ய முடியும்? ஆகவே, இந்த வீண் சுமைகளை நம்மை விட்டு இறக்கி விட வேண்டும்.

எனவே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற நபி, நமக்கு ஹலால், ஹராமை விளக்கி, மார்க்கம் தொடர்பான தவறான கொள்கைச் சுமைகளை நமது கழுத்திலிருந்து இறக்கியுள்ளார். ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று முஸ்லிம்களின் துர்பாக்கியம் இந்த தெளிவான கட்டளைகள் இருந்தும் கூட சிலர் வீண் சுமைகளை தமது கழுத்துகளில் போட்டுக் கொண்டுள்ளனர். ஆனால் அஹ்மதிகள் பைஅத் செய்த பிறகு இந்தத் தத்துவத்தை திரும்பவும் புரிந்துள்ளனர்; இந்தச் சுமையைக் கழுத்திலிருந்து எப்படி இறக்குவது? என்பதைப் புரிந்துள்ளனர். அல்லாஹ்வுக்கு நன்றி கூற வேண்டும். நாம் கபர்களில் ஸஜ்தா செய்வதிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளோம். பீர்மார்களின் வணக்கத்திலிருந்து பொதுவாக விலகியுள்ளோம். ஆங்காங்கே அவ்வப்போது அது மாதிரி புகார்களும் வரவே செய்கின்றன. பொதுவாக சடங்கு சம்பிரதாயத்திலிருந்து நாம் விலகியே இருக்கிறோம். இருந்தும்

நான் கூறுவது போன்று சில காரியங்கள் நமக்கு காணக் கிடைக்கின்றன. எனவே நாம் கவனமற்றுப் போய் விட்டால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமது கழுத்திலிருந்து இறக்கிய அச்சுமைகள் மீண்டும் நமது கழுத்திற்கு ஏறி விடும். பிறகு, இக்காலத்தில் அந்தச் சுமையை இறக்கி விடுமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீண்டும் நமக்குப் போதனை செய்துள்ளார்கள். நாம் மார்க்கத்திலிருந்து விலகிப் போய் விடுவோம் எனில், பிறகு ஜமாஅத்தை விட்டும் வெளியில் போய் விடுவோம் என்பது வெளிப்படையாகும்.

ஏனெனில் அல்லாஹ், அவனது ரஸூல் மற்றும் அவனது வேதத்தில் இருந்து பங்கு பெறுபவரும், அந்த ஒளியிலிருந்து பங்கு பெறுபவருமே ஜமாஅத்தில் இணைந்திருக்க முடியும். அல்லாஹ், அவனது ரஸூல் மற்றும் வேதத்திலிருந்து பங்கு பெறாதவர் ஒளியிலிருந்தும் பங்கு பெறாதவர் ஆவார். எவர் ஒளியிலிருந்து பங்கு பெற முயற்சி செய்வதில்லையோ அவர் ஈமானை விட்டும் வெளியில் போய் விடுகிறார். இது ஒரு வட்டம் ஆகும். அது தொடர்ச்சியாக சென்று கொண்டேயிருக்கும். எனவே, எப்போதும் நமது நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாமே ஒரு நூர் (ஒளி) ஆவார்கள். வானத்தில் இருந்து முழுமையான நூர் (ஒளி) அவர்கள் மீது இறங்கியது. அவர்கள் இவ்வாறு துஆ செய்கிறார்கள்.

“அல்லாஹ்வே! எனது உள்ளத்தையும் எனது மற்ற உறுப்புகளையும் ஒளிமயமாக்குவாயாக!” *(புகாரி - கிதாபுத் தஃவாத், பாபுத் துஆயி இஸன்தபஹ பில் லைல், ஹதீஸ் எண் 6316)*

இந்த துஆ உண்மையில் நமக்கு கற்றுத் தரப்பட்டதாகும். ஒவ்வொரு வேளையிலும் நமது சிந்தனைகளை, நமது எண்ணங்களை, நமது உறுப்புகளை, நமது மூளை, நமது உடல் ஆகிய எல்லாவற்றையும் அல்லாஹ்வின் போதனைகளுக்கேற்ப பயன்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்காக துஆ செய்ய வேண்டும். மனமும் தூய்மையாக இருக்க வேண்டும். அமல் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

அல்லாஹ் நம்மை ஈமானை உறுதியாக்குபவர்களாகவும், அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கூற்றிற்கு ஏற்ப செயல்படுபவராகவும், தீய சடங்கு சம்பிரதாயங்களிலிருந்து தப்பிப்பவராகவும், உலக இச்சைகளிலிருந்து மற்றும் அநீதியில் இருந்து விலகுபவர்களாகவும், அல்லாஹ்வின் ஒளியிலிருந்து எப்போதும் பங்கு பெறுபவர்களாகவும் ஆக்குவானாக. எந்தத் துர்பாக்கியமும் நம்மை அந்த ஒளியிலிருந்து விலக்கி விடாதிருக்கட்டுமாக!

✪❃✪❃✪❃✪